விஸ்வகலாநிதி

தென்னிந்திய விஸ்வகர்ம
மத்திய மகாசங்கம்
(ரிஜிஸ்தர் நி. S. 66/50)
ஆதரவில் வெளிவரும்,

**விஸ்வகர்ம ஜாதிய. சிற்ப, சித்திர,
கைதொழில் பத்திரிகை.**

1951 மே மீ

உள்ளுறை :

உள்ளுறை			பக்கம்.
பல குறிப்புகள்	....	....	1
தலையங்கம்	....	....	2
கட்டுரைகள்	....	....	3
கடிதங்கள்	....	....	17
சமூகச் செய்திகள்	....	....	19

தலைமை ஆசிரியர் - T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார்,
F.R.S.A. (London,)

★

இந்த விளம்பரம் இருக்குமிடம் அடுத்த இதழில் காலி யாகும். வேறு முழுப்பேஜ் விளம்பரம் தேவை

ரத்தினம் இண்டஸ்டிரியல் வொர்க்ஸ்

13/9 ஜெர்மியா ரோட், வேப்பேரி, சென்னை.

சென்னை சர்க்கார் பொருளுதவி பெற்றது.

உண்மையான—முதல்தர—இனாமல்வேலை. திராவகத்திற்கும், நெருப்புக்கும் சளைக்காது.

இனாமல் போட்டோ கற்கள் மோதிரங்களுக்கும், பதக்கங்களுக்கும், புரோச்களுக்கும், கைப்பொத்தான்கள் முதலிய மற்ற ஆபரணங்களுக்கும் உபயோகப்படுத்தக் கூடியன.



கடவுள், அல்லது தலைவர் [illegible] உருவம்

சைஸ்		விலை (ஒன்றுக்கு)
$\frac{1}{2}$"	...	ரூ. 3 8 0
$\frac{3}{4}$"	...	ரூ. 6 0 0
1"	...	ரூ. 8 8 0

சொந்த போட்டோ உருவமுடையது.

சைஸ்		விலை (ஒன்றுக்கு)
$\frac{1}{2}$"	...	ரூ 12 8 0
$\frac{3}{4}$"	...	ரூ. 16 0 0
1"	...	ரூ. 20 0 0

இந்தியாவில் உள்ள எல்லாத்தொழிற்சாலை வேலைகளிலும் இக்கம்பெனியாரின் வேலையே தலைசிறந்தது.

உன்னதம், உத்திரவாதம் வாய்ந்தது

எல்லா உருவத்திலும், அளவிலும் போட்டோ கற்கள் தயாரிப்போம்.

தனிப் பிரதி இல்லை

Regd. No. M. 5666

·விஸ்வ·கலாநிதி·

VISWAKALANIDHI

தென்னிந்திய விஸ்வகர்ம மத்திய மகாசங்க ஆதரவில் மாதமிருமுறை வெளிவரும்

Reg: S. No. 66 of 1950

விஸ்வகர்ம ஜாதீய,
சிற்ப,
சித்திர,
கைத்தொழில் பத்திரிகை.

விளம்பர விகிதம்

முழுபக்கம்	...	40 ரூ.
அரைபக்கம்	...	22 ரூ.
கால்பக்கம்	...	12 ரூ.

சந்தா விகிதம்

வருட சந்தா ரூ. 3—0—0

சங்க ரூ. 4/- அங்கத்தினர்களுக்கு இலவசம்

தலைமை ஆசிரியர்: குலோத்தாரக. T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், F.R.S.A. (லண்டன்)

மலர் - 4	1951 ஆ மே மீ	இதழ் 9-10

பலகுறிப்புகள்

ஒரு சமூகத்தின் உறக்கமும், விழிப்பும் அதன் இயக்கத்தின் சுறுசுறுப்பாலும், அக்கறை மிகுதியாலும் அளவிட்டறியப்படுவனவாம். மேற்குறித்த இன்றியமையாத குணங்கள் எச்சமூகத்தினிடை உண்மை ஊக்கத்துடன் மிக அதிகமாகக் காணப்படுகின்றனவோ, அத்துணையளவு அச்சமூகம் நமது நாட்டில் இன்று உன்னத நிலைமையிலிருப்பதைக் காண்கிறோம். அதனுடன் அச்சமூகங்கள் திருப்தியடைந்து, இறுமாந்து, வாளாயிருந்து விடுவதில்லை. இன்னும் பல்வேறு துறைகளிலும், அரசியலிலும் பங்குகொண்டு உயர் பதவிகளைக் கைப்பற்றும் கருத்துக் கொண்டுள்ளனவாம். ஒரு காரியத்தை வருமுன் உணர்ந்து அக்குறைபாட்டைப் போக்கிப் பெருமையடையப் பார்க்கின்றன; அடைந்தும் வருகின்றன. திரிகாலத்தையும் உணர்ந்து நடந்ததாகப் பெருமை பேசிக்கொள்ளும் விஸ்வகர்மர்கள், ஒரு காரியம் அல்லது இன்னல் வந்துற்ற ஆறு மாதகாலங்களுக்குப் பின்னும் அதனை உணர்ந்துகொள்ள மாட்டாதவராய் வாழ்ந்து வருகின்றனர்! பிற சமூகத்தார் அவர்களை இடித்தும், இழித்தும் கூறிவருவதில் ஆச்சரியப் படுவதற்கில்லை.

* * *

வரப்போகும் தேர்தலைப் பற்றி முந்திய இதழில் நீண்ட தலையங்கமும், இதர குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன. இவைகளை எத்தனை விஸ்வகர்மர்கள் எழுத்தெண்ணி வாசித்து உணர்ச்சி ததும்பப் பெற்றூர்களென நாம் அறிந்து கொள்ளக்கூடவில்லை. கார்மேகக் கூட்டங்களாகிய பல இன்னல்கள் சூழ்ந்து, தலை மீது இடித்து அச்சுறுத்தும் இவ்வேளையிலும் விஸ்வகர்மர்கள் தமக்கு நேரிடும் பேராபத்தை உணராமலே, இப்போது கிடைக்கும் வருவாயையும், ஒருவேளை உணவையும் கொண்டு திருப்தி யடையப் பார்ப்பது மிக வருந்தத் தக்கது. இனியேனும் கவலை கொண்டு தாரித்திரியத்தினின்றும் தங்களை விடுவித்துக் கொள்வார்களா?

* * *

இலங்கையிலுள்ள பொன் வேலைக்காரர்கள். தங்கள் சங்க இயக்கத்தின் மூலம் அரசியலாரிடமிருந்து 3 அவுன்ஸ் முதல் 150 அவுன்ஸ் தங்கத்தை அடையப்பெற்று, பிறர் உதவியின்றி தங்கள் தொழிலைப் பிரபலமாக நடத்தி வருகின்றனர். விவரம் வேறிடத்தில் காண்க. நமது தமிழ் நாட்டிலுள்ளவர்கட்கும் இத்தகைய சலுகையை பெற்றுத்தரவேண்டுமென்பது நமது மத்திய மகா சங்கத்தின் நோக்கங்களில் முக்கியமான தொன்றாகும். இவ்வித சலுகையை நமது மகா சங்கம் பெற்றுத் தருவதற்கியலும். நமது சங்கத்தின் அங்கத்தினர்களெல்லாம் காலக்கிரமத்தில் இவ்வுரிமையைப் பெற அருகராவர்.

* * *

வரப்போகும் பொதுத் தேர்தலில் பிற சமூகத்தார் எல்லாவற்றிலும் தங்களைத் தயாராக வைத்துக் கொண்டுள்ளனர். "வன்னியர் வோட்டு அன்னியருக்கில்லை" என்னும் கோஷம் தமிழ் நாட்டில் செவிடுபட முழங்கி வருவதைக் கேட்டும், அவர்கள் முயற்சிகளைக் கண்கூடாக்கண்டும் நம்மனோர் கவலையற்றுக் கிடப்பது வருந்தற்குரிய தன்றோ? சமூக மக்கள் இனியேனும் உறக்கந் தெளிந்து உலகத்தோடொத்து வாழ்வார்களென நம்புகிறோம் "வோட்டினில் நாட்டம்—குலத்தினர் காட்டுக" என்னும் மூதுரையைப் பின் பற்றுவார்களாக.

விஸ்வ கலாநிதி

1951 ௵ மே ௴

நமது இரண்டாவது தேசீய அரசியல் மகாநாடு

நமது விஸ்வகலாநிதி புத்தாண்டு மலரில், வரப்போகும் பொதுத் தேர்தலைக் குறித்த பல நுணுக்கங்களை மிக விரிவாக எடுத்தியம்பியுள்ளோம். கரைதட்டிக்கிடக்கும் நமது சமூகமாகிய கப்பலுக்கு இத்தேர்தல் ஒரு கலங்கரை விளக்காகும். அது காட்டும் வழிச்சென்று நமது சமுக மக்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இவ்வேளை முயல்வதே அறிவுடைமையாகும். நாம் கூட்டவிருக்கும் சென்னை அரசியல் மகாநாடு தேர்தலைக் குறித்த எல்லா பிரச்னைகளையும் ஆராய்ந்து வழி வகுக்குமென்பது உறுதி. இம்மகா நாட்டை வரும் ஜுலை மாதம் 29உ கூட்டுவதாக அறிவித்திருந்தோம். ஜுன் மாதத்திலேயே இம்மகா நாட்டைக் கூட்டுவது நலமென பலர் கருதுகின்றனர், காங்கிரஸ் கமிட்டியினரும், பல பொது ஸ்தாபனங்களும் தங்கள் வேலைகளை மே மாதததினிறுதியில் முடித்துவிடக் கூடுமென, அறிந்த வட்டாரங்களில் பேசப்படுகின்றது. காங்கிரஸ் 'அட்ஹாக்' கமிட்டியொன்றை நிறுவி காங்கிரஸ் அபேட்சகர்களை ஒவ்வொரு வட்டாரங்களிலும் நிறுத்த ஏற்பாடு செய்யும் நோக்கமும் இருந்து வருவதாக நாமறிகிறோம். காங்கிரஸை தழுவியுள்ள நமது சமூகத்தாரை "நாட்டுக் கைத்தொழிளாளர்" வகுப்பாகக் கருதி நமது சமூக அபேட்சகர்களையும் அக்கமிட்டியார் ஆங்காங்கு நிறுத்துவார்களென நம்புகிறோம். இது குறித்து நமது மத்திய மகா சங்கம் காலத்தில் கிளர்ச்சி செய்யாவிடில், நமது சமூகம் முந்திய தேர்தலில் மறந்து விடப்பட்டதுபோல் இந்தத் தேர்தலிலும் மறந்து கைவிடப்படுமென்பது உறுதி.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியே நமது சமூகத்துக்கு வலிந்து உதவி புரியுமென்று எண்ணுவது வீணாகும். அக்கமிட்டியார் நமது தொழிலாளர் சமூகத்தை மறந்தே வந்திருக்கின்றனர். அவ்வாறே இன்றும் இருந்து வருகின்றனர். பொது மக்களுக்கும், தேசீய ஸ்தாபனங்களுக்கும் விஸ்வகர்ம கைத்தொழிலாலாகிய பலப்பல நினைவுச் சின்னங்கள் நாட்டில் உண்டு. தாங்கள் வதியும் வீடுகளையும், விளை நிலங்களை, தாய், மனைவி, மக்களையும், வழிபடும் தெய்வங்களையும் அன்றாடம் கண்டிருந்தும் அவைகளை இயற்றித்தந்த தொழில் சமூகத்தை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் அவர்கள் பால் இன்றளவும் இல்லை. அந்த எண்ணத்தை பொதுமக்களிடத்தும், காங்கிரஸ் மேலிடத்தும் உண்டாக்கவேண்டுமென்பதே நமது தேசீய அரசியல் மகாநாட்டின் நோக்கமாகும். அந்நோக்கம் காங்கிரஸ் கட்சியினரால், மிக்க அனுதாபத்துடன் வரவேற்கப்பட்டு கவனிக்கப்படுமென நாம் நம்புகிறோம்.

நாம் நமது அரசியல் மகாநாடு மூலம் சட்டபூர்வமாக முயன்று கேட்டும், நமது வேண்டுகோள்கள் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியாரால் கவனிக்கப்பட்டு பரிகாரம் செய்யப்படாவிடில், நமது சமூகம் வேறு முறைகளைக் கைக்கொள்ளவேண்டி வரும். இந்நாள்காங்கிரஸ்ஸ்தாபனத்திற்குப் போட்டியாக இத்தேர்தலுக்கு பல ஸ்தாபனங்கள் தோன்றியுள்ளன. இன்னும் பல தோன்றுமென்பதும் நிச்சயம் அவைகள் மக்களிடையே பலத்த பிரசாரங்கள் செய்துவருகின்றன. உதாரணமாக, அண்மையில் சோஷலிஸ்டு கட்சிக்காரரின் பிரசாரத்தால் காரைக்குடியில் அக்கட்சி மிக்க பலம் பெற்று வருவதாக அறிகிறோம். காரைக்குடியிலும் இன்னும் பல முக்கிய நகரங்களிலும் அவ்வித பெருங் கூட்டங்கள் நடைபெற்று வருவதாக நாமறிகிறோம். அதில் நம்மனோர் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளக் கட்டாயப் படுத்தப் படுவதாகவும் அறிகிறோம். பெரும் ஜனத்தொகை கொண்ட இச்சமூகத்தார் அரசியலில் இவ்வாறு பிளவு பெறுவதானால், நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுத்தந்த மகத்தான காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு நன்றி மறந்தவராவோம். ஆகையின், இவ்வித முக்கிய பிரச்னைகளையெல்லாம் ஆராய்ந்து முடிவு கண்டு அதன்படி திடமாக நடந்துகொள்வதற்கேஇம் மகா நாடு கூட்டப் பெறுகின்றது.

இம் மகாநாட்டுக்குத் தலைவராக எவ்விதகட்சியிலும் சேராத பொது நோக்குடைய ஒரு தகுதி வாய்ந்தவரை நமது மத்தியமகா சங்கத்தின் காரிய நிர்வாகக் கமிட்டியார் தேர்ந்தெடுப்பார்கள். அது போலவே, தேர்தலுக்கு நிறுத்தப்படும் அபேட்சகர்களும், சமூக சங்கங்களின் ஆதரவு பெற்று தேர்ந்தெடுக்கப்படுவர். ஆயினும் இது காரியத்தில் நமது நோக்கம் என்னவென்பதை சமூக மக்கள் அறிந்துகொள்ள ஆவற்படுவதால் அதனை இங்கு சற்று விளக்குவோம்.

எல்லா முக்கிய நகரங்களிலும் விஸ்வகர்ம வாக்காளர் மிகுதியாக வதியும் இடங்களிலும் (விஸ்வகர்ம) தொழிலாளர்களை அபேட்சகர்களாக நிறுத்த வேண்டு மென்பதே நமது நோக்கமாகும். அதனைத் தழுவி சென்னை, தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், ஆகிய வட்டங்களில் தனித் தனியாகவாவது, ஒன்று சேர்த்தாவது, ஐந்து அபேட்சகர்களை சென்னை அசெம்பிளி சபைக்கு காங்கிரஸ் பிரதிநிதிகளாக நிறுத்த வேண்டுமென்பதும், சென்னை மேல் சபைக்கு தக்க இருவரை அபேட்சகராக நிற்கச் செய்ய வேண்டு மென்பதும் நமது கருத்தாகும். நமது ஜனத் தொகையின் விகிதாச்சாரத்திற்கேற்ப, 375 அங்கத்தினர்களைக் கொண்ட சட்ட சபைக்கு நாம் 5 ஸ்தானங்களை அபேட்சிப்பது நீதியான விருப்பமேயாகும். 75 அங்கத்தினர்களைக் கொண்ட மேல் சபையில் இரு அங்கத்தினராவது இருக்கவேண்டுமென நாம் நினைப்பது தவறன்று.

எனவே, மேற்குறித்த ஆறு அங்கத்தினர்களும் முறைப்படி நமது இரண்டாவது மகா நாட்டில் தேர்ந்தெடுக்கப் பெற்று, சமூக மக்களால் அங்கீகரிக்கப்பட்டு அபேட்சகர்களாக நிறுத்தப்படுவர். நமது மகா நாட்டின் முடிவை காங்கிரஸ்ஸ்தாபனம் அங்கீகரித்தாக வேண்டு மென்பது கட்டாய விதியல்ல. அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டு மென்று உறுதிகொண்டுள்ள எந்த ஸ்தாபனமும், இலகுவில் பிறர் உரிமைகளை ஏற்றுக் கொள்ளவே மாட்டாது. அவ்வாறு

ஏற்கப்படாவிடில், ஒருவர் தமது உரிமையை எவ்வாறு பெறவேண்டுமென்பதைக் குறித்தும் காங்கிரஸ் ஸ்தாபனம் முன்னையநாளில் நாட்டுக்குவழிவகுத்துக்கொடுத்துள்ளது. நமது சமூகத்தின் நியாயமான, தர்மமான, மிதமான வேண்டுகோள்களை காங்கிரஸ் ஸ்தாபனம் கவனியாது இதுபொழுதும் உபேட்சைக் காட்டுமானால், நமது சமூகத்தின் அபேட்சையை எவ்வாறு நிறைவேற்ற வேண்டுமென்பதையும் நமது மகாநாடு தீர்க்கமாக ஆலோசித்து முடிவு கட்டும். நாம் இயன்றவரையில் காங்கிரஸ் முயற்சிகளோடு கூடி யுழைக்கவும், ஆதரவு கொடுக்கவுமே ஆசிக்கிறோம். அதுவே நீதியெனவும் நினைக்கிறோம். நமது உள்ளக் கருத்தை உள்ளவாறுணர்ந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியாரும், தலைவர்களும் நடந்து கொள்வார்களென்று நாம் உறுதியாக நம்புகிறோம். நமது சமூகம் உயிருள்ள சமூகமாக இச்சமயம் நடந்து கொள்ள வேண்டுமென்பதே நமது வேண்டுகோள்.

தலைமை ஆசிரியர்

நாம் மானமுள்ளவாழ்விற்கு மீள வேண்டாமா?

(தேர்தல் தொகுப்பு 1)

புரந்தான்—தீட்டியது

இந்த நாட்டிலே உணவு பிரச்னை, குடியிருப்பு பிரச்னை, கிடைத்த சுதந்திரத்தை காப்பாற்ற வேண்டுமே என்ற கவலை, நாடு இருதுண்டாக பங்குப் போடப்பட்டதால் ஏற்பட்ட தொல்லைகள் இவை எல்லாம் இன்னும் தீராமல் இருக்கும் இந்நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்த வேண்டுமென்று அரசியலார் அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கின்றனர். பொருளாதாரத் துறையிலோ பல சிக்கல்கள் ஏற்பட்டு இன்னும் பல அறிஞர்கள் கூடி திட்டம் வகுத்தும் ஒரு பயனையும் காணமுடியவில்லை. இவற்றை ஒவ்வொரு சமூகமும் உணர்ந்து அதற்குத் தக்கவாறு தங்கள் நிலைமையை மாற்றிக்கொண்டு வருகின்றனர். இவைகள் எல்லாம் நம் சமூக மக்களுக்கு புதிதாகவும், ஆச்சரியமாகவும் தோன்றலாம். ஆம்! அவ்வாறு தோன்றவேதான் இக்கருத்துக்களை வெளியிடவேண்டுமென்று எண்ணுகிறோம். இச்சமயத்தில், மற்ற சமூகத்தினர் தங்களின் விசாலமான நோக்கத்துடன் அனுபவ வாயிலாக ஏற்பட்ட அறிவைக்கொண்டு உலக மக்களின் நிலைமையை உணர்ந்து, தங்கள் சகோதரர்களின் நிலைமையையும் கவனிக்கின்றார்கள். இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கின்றனர். உடனே அவர்கள் மனதில் ஓர் புரட்சிகரமான மாறுதல் ஏற்படுகின்றது. எவ்வித மாறுதல் தோன்றுகிறது என நினைக்கிறீர்கள். தங்கள் சகோதரர்களின் நிலைமையைக் கண்டு இனி வீணே காலம் போக்குவது தகாது; ஆகையால், சமூக முன்னேற்றத்திற்கு வழி காட்டவேண்டும்; அத்தகைய கருத்துக்கிணங்கக்கூடியவர்களின் ஆதரவு வேண்டும், என பிரசாரம் செய்கின்றார்கள். இத்தகைய தியாக உணர்ச்சியை தங்கள் மக்கள் மனதில் புகுத்திவிடுகின்றார்கள். தியாக உணர்ச்சி இருந்தால் எக்காரியத்தைத் தான் சாதிக்க முடியாது? அத்தகைய தியாக உணர்ச்சியால்தான் இந்நாடு பூரண சுதந்திரம் அடைய முடிந்தது.

அதிகார பூர்வமான தேர்தல் என்பது இந்த நாட்டில் ஏற்பட்ட ஆங்கில அரசாட்சியால் வழங்கிய சீர்திருத்தம். பொதுமக்களுக்கும் அரசாட்சிக்கும் யாதொரு சம்பந்தமில்லாமல் ஆளப்படுவோர் வேறாகவும் ஆளுவோர் வேறாகவும் இருந்த காலத்தில் மிண்டோ-மார்லி சீர்திருத்தம் வழங்கப்பட்டு மக்கள் அரசியலிலும், அதிகாரத்திலும் சம்பந்தப்பட முற்படலாயினர். பின்னர் மாண்டேகு-செம்ஸ்போர்டு போர்டு சீர்திருத்தம் வழங்கப்பட்டது. அதன் காரணமாக ஸ்தல சுய ஆட்சி நிர்வாக முறை முதலியன நம் நாட்டின் மக்கள் கைக்கு மாறியது. மேலும் படித்த, அதிலும் ஆங்கில கல்வி கற்ற சில சமூக மக்கள் இவற்றைத் தங்களுக்குப் பயன் படுத்திக் கொண்டனர். ஆகையால், ஆங்கிலக் கல்வி பயிலாத வம்சபரம்பரையான தொழிலாளர்களும் விவசாய மக்களும் அவ்வித ஸ்தாபனங்களில் இடம் பெற முடியவில்லை. அவர்களுக்காக சட்டரீதியாக ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் பணமும், செல்வாக்கும் பெற்ற முதலாளி வர்க்கமும் அவர்களைச் சேர்ந்தவர்களும் தான் புகுந்து கொண்டு ஆதிக்கம் செலுத்தலாயினர்.

இந்த நிலைமையைத்தான் நாம் சற்று கவனிக்கவேண்டும். அச்சமயம் சட்டரீதியாக கவர்னர்களுக்கும், மந்திரிகளுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு பிரதிநிதித்வம் இல்லாத சமூக மக்களுக்கும், பிரதிநிதித்துவத்தை அடைவற்கு செயலற்றவர்களாக இருக்கும் சமூக மக்களுக்கும் தகுந்த முறையில் பிரதிநித்வம் அடைய ஏற்பாடு செய்திருந்தார்கள். அதுதான் நாமினேஷன் மூலம் கவர்னர்களும், மந்திரிகளும்கூடி பிற்போக்கான வகுப்பினர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து சட்டசபை மெம்பராக்கிக் கொண்டு வந்தனர். நாமினேஷன் மூலம் தேர்ந்தெடுப்பதற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் தான் தேவை. அதன் மூலம் சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் சமூகப் பிரதிநிதிகள் இரண்டொருவர்தான் அவ்வாறு நாமினேஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். நம் சமூக நிலைமையைப் பற்றி அப்பொழுது இருந்த அரசியலாரிடம் அவர்கள் எடுத்துகூற முடிந்ததே தவிர சமூக நிலைமையை உயர்த்திக்கொள்ளும் வகையில் யாதொரு திட்டத்தையோ, கொள்கையையோ ஏற்படுத்த முடியாத நிலைமையில் இருந்தனர். காரணம் நம் சமூக மக்களின் அறியாமையும், அரசியல் ஞான சூன்யமே தவிர வேறில்லை. 1935-வது இந்திய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தது. அச்சமயம் அரசியல் கட்சியாகிய காங்கிரஸ் சட்டசபை பிரவேசத்தை ஆதரித்தது. 1936-37-ல் சட்டசபைகளைக் கட்சியார் கைப்பற்றினர்கள். அப்பொழுது தான் பொதுத்தேர்தல் மூலம் சட்டசபையை அடைய வேண்டுமென்று கூறினர்கள். அதில் நம் சமூகத்தினர் ஒருவராவது இடம் பெறமுடியவில்லை. காரணம், செல்வாக்கின்மை, அறியாமை, வறுமை, கட்டுப்பாடு இல்லாத நிலைமை, காலத்திற் கேற்றவாறு நம்மை நாம் சீர்திருத்திக்கொள்ள தவறியதுதான். நம்முடைய ஆராய்ச்சி யெல்லாம் வேதபுராண இதிகாசங்களில் என்ன நம்மைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது என்ற திண்ணைத் தூங்கி பிரசங்கமே தான். ஆனல் நம்மவர்களின் சரித்திரத்தை

இன்றுள்ள நிலைமையில் எழுதப் புகுவோமானால், நம்மை வியாபாரக் கூட்டத்தின், தரகர்களின் கூட்டத்தின் அடிமை என்றும், கைக்கூலிக் கூட்டம் என்பதைத் தவிர வேறு எந்த விதமான ஆதாரமோ சரித்திரமோ இருக்கிறது என்று சொல்லுங்கள், பார்ப்போம். இவ்வித அடிமை மயக்கத்திலிருந்து தெளிய, அறிவு மருந்தாகிய சீர்திருத்தக் கொள்கைகளை புகுத்த முற்பட்டோமானால், அதற்கு எதிர்ப்பும் இன்னலும் தான் செய்வது நம்மவர்களின் பழக்கம்.

காரணம், நமக்கு நிர்வாக முறையில் போதிய பயிற்சி கிடையாது. கிளிப் பிள்ளைபோல் நம்முன்னோர்கள் செய்வதையும், சொன்னதையும் ஆதாரமாகக் காட்டுகிறோமே தவிர வேறு, காலத்திற்கேற்ற வகையில் என்ன உருப்படியான காரியங்களைச் சாதிக்கிறோம்? நம்முன்னோர்கள் நம் வசத்தில் விட்டு விட்டுப் போன பொது ஸ்தாபனங்களை ஊழல்கள் இல்லாமல் நம்மக்களுக்கு சேவை செய்யுமாறு விட்டு வைத்திருக்கிறோமா? எந்த கைத்தொழில் ஸ்தாபனம் நம் சமூகத்தாராலே நிறுவப்பட்டு அதிலே கட்சிவாதம் இல்லாமல் நடைபெறுகிறது எனக் கேட்கின்றேன்? நம்மவர்களுக்கு எப்பொழுதும் தகராறை விளைவிக்கும் பேச்சும், செயலும் தான் பிறப்புரிமையாக்கிக் கொண்டிருக்கிறார்களே! இந்தக் கொள்கை எந்த பொது ஸ்தாபனத்தில் சேர்ந்தாலும் தலை காட்டியே தீரும். கைத் தொழிலாளர் எனக் கூறிக்கொண்டு எந்த ஊரில் இருந்தாலும் ஆங்காங்கு கட்சிப் பிரதிகட்சிகள் இல்லாமல் இருக்கிறார்களா? அவ்வாறு இல்லை என்று வைத்துக்கொள்வோம். அங்கு நம் சமூக மக்களுக்காக ஓர் பொது ஸ்தாபனம் ஏற்படுகிறது என்றும் வைத்துக்கொள்வோம். உடனே சொந்த நலன்கள் சம்பந்தமாக இரண்டு, மூன்று கட்சிகள் ஏற்பட்டு ஒத்துழைப்பும், ஒற்றுமையும் நிலை நாட்டப் படுவதற்கு பதிலாக பொறுமையும், பேதா பேதமும் உண்டாகி பொதுஸ்தாபனம் கவனிப்பாரற்று மறைந்து மக்கி விடுவதை நாம் கண் கூடாக் காணுகிறோம், இன்றளவும்.

தோழர்களே! இந்த நாடு பிரிக்கப்பட்டு ஒரு பிரிவில் மத சார்புள்ள அரசாங்கமும், மறு பிரிவில் மத சார்பற்ற அரசாங்கமும் நடைபெறுவதைக் காண்கிறோம். பிரிவினைக்குப் பிறகு நடைபெறும் இம் முதல் தேர்தலில் வயது வந்தவர்கள் எல்லாம் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுவிட்டனர். எனவே மொத்த ஜனத் தொகையில் பாதி பேர் வாக்காளர்கள். பொது மக்களை இனி ஏமாற்றி வாக்கைப் பறிப்பது முடியாத காரியம். இனிமேல்தான் அவரவர்கள் தங்கள் தங்கள் சமூகத்திற்கு உழைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. முன் நடைபெற்ற தேர்தல்களிலெல்லாம் அன்னிய ஆட்சியை ஒழிக்க திட்டம் போடப்பட்டது. அதன் காரணமாக ஏற்பட்ட போட்டியில் வெற்றி அடைந்தனர். இனிமேல் யாரையும் வெளியேற்றுவதற்கு திட்டம் போட அவசியம் இல்லை. ஆயினும் ஏதாவது ஒரு கட்சி இந்நாட்டில் இருக்கவேண்டுமானால், விடுதலை அடைந்த மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு வேண்டிய வகைகளை செல்வது தான் அதன் சிறந்த தொண்டு. பல சமூகங்கள் கொண்ட நாட்டில் ஒவ்வொரு சமூகமும் முன்னேறினால் தான் நாட்டில் சுபிட்சமும், சமாதானமும் நிலவும். இல்லாவிட்டால் கிளர்ச்சியும் அதிருப்தியும் தான் ஏற்பட்டு வளரும்.

மகாத்மா காந்தி கூறிய "இராம ராஜ்யம்" என்பது பொருளாதார சுதந்திரத்தை அடிப்படையாக வைத்து நாட்டை ஆளவேண்டுமென்பது. அத்தகைய முறையில் எந்தக்கட்சி (அதாவது கட்டுப்பாடுள்ள மக்கள் மதிக்கக்கூடிய, பொது மக்களின் ஆதரவு பெற்றது) யானாலும் நம் சமூகத்தினருக்கு அரசியலில் சலுகைபெற ஏற்பாடு செய்ய விரும்புகிறதோ அதில் உடனே சேர்ந்து நம் சமூகத்தினரின் நிலைமையை உயர்த்திக்கொள்ள வேண்டும். எவ்வித கட்சியாக இருந்தாலும் சரி, நம் சமூகப் பிரதி நிதிகளை ஆதரித்து அவர்களுக்கு நம் மக்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு போதிய பிரதிநிதித்வம் சட்டசபை முதல் பஞ்சாயத்து சபைவரையில் கிடைக்கச் செய்யும்படி பாடுபடுகிறதோ அதில் நம் மக்கள் சேர்ந்துழைப்பதற்கு இன்று முதல் தங்களைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும். ஒன்றிலும் நாம் சேர வேண்டாம். நாம் தொழிலாளர் சமூகம். யார் எப்படிப் போனால் என்ன? என்ற பிற்போக்கான எண்ணம் இனியும் ஏற்படுமேயானால் நம்மைப்போல் உலகில் வேறு முட்டாள்தனமான மக்களைக் காணமுடியாது எனக் கூசாமல் பறைசாற்ற நேரிடும்.

1937-ம் ஆண்டு சேலத்திலே நடைபெற்ற மகா நாட்டில் நம் சமூகத்தினரில் பட்டம் பதவி பெற்ற ராவ்பகதூர் S. ஆண்டி சுந்தராச்சாரியார் B. A., B. L., அவர்களை நாமினேஷன் மூலம் மேல் சபைக்கு ஒதுக்கப்பட்ட 10 ஸ்தானங்களில் ஒரு ஸ்தானத்தில் அன்னாரை நியமிக்கும்படி அரசியலாரை விண்ணப்பங்கள் மூலமாயும், ஆங்காங்கு நிறுவப்பெற்ற சபைகள் மூலமாயும், மகாநாட்டிலும் தீர்மான மூலம் கிளர்ச்சி செய்யப்பட்டது. அப்பொழுது இருந்த காங்கிரஸ் மந்திரி சபை குறுக்கிட்டு தேர்தலிலும், நாமினேஷன் மூலமாயும் ஒரு ஸ்தானம்கூட கிடைக்காமல் செய்துவிட்டார்கள். ஆனால் ஸ்ரீ ஆண்டி சுந்தராச்சாரியார் கல்வி யோக்கிதாம்சத்தில் பிரதமருக்கு எவ்வித்திலும் குறைந்தவரல்லர். இருந்தபோதிலும் வேறுவிதமாக விஷயம் மாறிவிட்டது. சமூகத்தின் பேரால் சட்ட சபையில் ஸ்தானம் கிடைக்காது என்று தெரிவித்தார்கள். ஆனால் சட்ட சபையில் பின் நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் பிரதமரின் எல்லையில்லாத சொந்த சமூகத்தினரைக் காப்பாற்றச் செய்த சூழ்ச்சி வேலைகளை கீழே கூறப்படும் சந்தர்ப்பங்களைக் கொண்டு தெளிவடையலாம்.

சென்னையில் நம் சமூகத்தார் பிரதமருக்குக் கொடுத்த உபசாரக் கூட்டத்தில், முதல் மந்திரி என்ற ஹோதாவில் கூறிய பதிலை ஆராய்ந்து பாருங்கள். அவர் கூறியதாவது "நாட்டில் பல தொழில்கள் இருக்கின்றன. கடலைமாவும், சர்க்கரையும் சேர்ந்தால்தான் லட்டு பிடிக்கமுடியும். அதைப்போல் கடலைமாவுக்குத் தொழிலையும், சர்க்கரைக்கு ஒற்றுமையையும் ஒப்பிட்டு இரண்டும் சேர்ந்தால் தான் நீங்கள் உயர்வாக வாழமுடியும். உங்களுக்குள் ஒற்றுமை இல்லை. சட்ட சபையின் பெருவாரியான ஸ்தானங்களை கைப்பற்றிய நாங்களே ஒன்றும் எண்ணியபடி செய்ய முடியவில்லை. உங்களுக்கு ஒன்றிரண்டு ஸ்த்தானங்கள் கொடுப்ப

தால் நீங்கள் வந்து என்ன சாதிக்க முடியும்? உயர் உத்தியோகங்கள் உங்களில் சிலருக்குக் கிடைத்தாலும் உங்களுக்குள்ளாகவே சிலருக்கு பொறாமை உண்டாகி உள் சண்டைகள்தான் ஏற்படும். அவரவர்கள் குலத்தொழிலை அவரவர்கள் செய்து வருவதுதான் நியாயம். உங்கள் குலத்தொழிலையே நீங்கள் செய்து வாருங்கள். கதர் துணியை ஆதரித்து சுதேசியத்தை நிலைநாட்டினால் தங்க ஏற்றுமதி தானே தடைப்பட்டு விடும். உங்களைத் தனித் தொகுதியாகப் பிரித்து உரிமை அளிக்க காங்கிரஸில் திட்டம் அமைக்கப்படவில்லை. எல்லோருடனும் சேர்ந்து காங்கிரஸில் ஒத்துழையுங்கள். இதரர்களுக்குச் செய்யும் நன்மைகள் உங்களுக்கும் அளிக்கப்படும் என்று பதிலளித்தார்.'

ஒப்புக்கொள்வோம். முழுமனதோடு ஒப்புக்கொள்வோம். அவர் மாநில மந்திரி ஹோதாவில் பேசுகிறார். நாம் இந்நாட்டில் பிறந்து, மரித்திடும் இம்மண்ணிலே, இவற்றைக் கேட்கும்படியான நிலையில் இருக்கிறோம். அவர் கூறிய ஒற்றுமைக்குத் தகுதியோ, திறமையோ தேவையில்லை. ஆம், நமக்குள் ஒற்றுமை இல்லை என்பது வாஸ்தவம். நாமும் மற்ற சமூதாயத்தார்களைப் போல் உயர் வாழ்வு பெற ஆசைப்பட வேண்டியது ஒவ்வொருவருடைய பிறப்புரிமையேதான். ஒன்றிரண்டு ஸ்தானங்கள் கொடுப்பதால் நாம் போய் என்ன சாதிக்க முடியும் என்றார். பார்ப்பனர்களுக்கு என்று ஏதாவது ஸ்தானங்கள் சட்ட சபையில் இருக்கின்றதா? அவருக்கு பிரதமர் ஸ்தானம் கொடுக்கப்பட்டதால் தானே அவர் இனத்தாராகிய மற்ற ஒருவரை பின்புறமாக அழைத்துவந்து மந்திரி வேலை கொடுக்கச் செய்தார். பிறகு சட்டசபையில் ஒரு ஸ்தானத்தை காலியாக்கி அவரை தேர்ந்தெடுக்கும் படிச் செய்தார். அவரையே சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்காவிடில் மற்ற தமது குறிப்பிட்ட இனத்தாரை அழைத்துக்கொள்ள முடியுமா எனக் கேட்கின்றேன். நம் சமூகத்தினர் கேட்டால் தான் லட்டு பிடிக்கும் குட்டிக்கதை உபதேசம் நடைபெற்றதைச் சிந்தித்துப் பாருங்கள்.

(தொடரும்)

பொதுத் தேர்தலை நவம்பர், டிசம்பரில் நடத்தி விடுவதென்பதே சர்க்கார் உத்தேசம்

1952, பிப்ரவரிக்கு ஒத்திவைக்க சென்னை மேல் சபை கோரிக்கை பற்றி சட்ட மந்திரி பதில்

ஒத்திவைப்புக்கு சென்னை கூறும் காரணம் சரியாக இல்லை; இதர ராஜ்யங்கள் அவ்வாறு கேட்கவில்லை.

புதுடில்லி, மே. 5.

பொதுத் தேர்தலை வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடத்திவிடுவது என்பதே இந்தியா சர்க்காரின் முடிவான நோக்கம் என்று சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் இன்று பார்லிமெண்டில் மீண்டும் கூறினார்.

சென்னை ராஜ்யத்தில் பொதுத் தேர்தலை அடுத்த வருஷம் பிப்ரவரி மாதத்திற்கு முன்னால் வைத்துக் கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுவதாக சமீபத்தில் சென்னை மேல்சபை நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தைப்பற்றி இன்று பார்லிமெண்டில் கேட்டதற்குபதிலளித்தடாக்டர் அம்பேத்கார்: "பொதுத்தேர்தலை அடுத்தபிப்ரவரிக்கு ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கு சென்னை மேல்சபை தீர்மானம் கூறும் காரணங்கள் சரியானவை என்று இந்திய சர்க்கார் கருதவில்லை என்றார்.

சென்னையைத் தவிர்த்து இதர ராஜ்யங்கள் கேட்கவில்லை.

அறுவடைக்காலம் என்பதற்காகவோ அல்லது வேறு காரணங்களை முன்னிட்டோ பொதுத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று வேறு எந்த ராஜ்யமும் இது வரை இந்திய சர்க்காரைக் கேட்கவில்லை என்றும் டாக்டர் அம்பேத்கார் கூறினார். ஆனால் தேர்தலுக்கென்று 2 மாத காலத்தை இந்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கிறது என்றும், அந்தகால எல்லைக்குள் எல்லா ராஜ்யங்களும் தங்களுக்கு உசிதமான படி பொது தேர்தலைநடத்திக்கொள்ளலாம் என்றும் அவர் சொன்னார்.

அதற்குள் தொகுதி நிர்ணயம்.

குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு சௌகரியமிருக்கும் வகையில் தொகுதி நிர்ணய விஷயம் காலாகாலத்தில் முடிவு செய்யப்பட்டுவிடும் என்றும் சட்ட மந்திரி கூறினார்.

1952 பிப்ரவரியில் பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப் படலாம் என்று பத்திரிகைகளில் வெளியாகியிருக்கும் ஒரு செய்தியை சட்ட மந்திரிக்கு ஞாபகப் படுத்தியதற்கு "அச்செய்திக்கு பொறுப்பாளிநானல்ல" என்று அவர் பதில் சொன்னார்.

ரேடியோ மூலம் பிரசாரம்.

ரேடியோ மூலமும் மற்றவகையிலும் தேர்தலின் முக்கியத்தைப் பற்றி வாக்காளருக்கு போதிக்க செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளைப் பற்றியும் ரேடியோ, விளம்பர மந்திரி ஸ்ரீ. ஆர். ஆர். திவாகர் இன்று பார்லிமெண்டில் கூறினார். இந்திய அரசியல், வயது வந்த எல்லாருக்கும் வோட்டுரிமை வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்படும் முறை, தேர்தல் முறை ஆகியவைகளைப் பற்றி ரேடியோ பிரசங்கங்கள் எல்லா அகில இந்திய ரேடியோ நிலையங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்றார்.

இதற்காக தக்க சிறு துண்டுப்பிரசுரங்களை பிரசுரிக்கவும் சர்க்கார் ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறது என்றும் ஸ்ரீ திவாகா கூறினார்.

ஜனாதிபதி உத்தரவு விரைவில் பார்லிமெண்டில் வரும்.

பிரதம தேர்தல் கமிஷனர் ஸ்ரீ சுகுமார்சென் தம்முடைய யோசனைகளை சர்க்காரிடம் சமர்ப்பித்து விட்டார். ஜனாதிபதி உத்தரவிடுவதற்கான யோசனைகளை உருவாக்குவதற்காக, மந்திரிசபை உபகமிட்டி ஒன்று இப்பிரச்னை சம்மந்தமாக பரிசீலனை செய்ய விருக்கிறது.

எல்லா ஸ்தானங்களுக்கும் காங்கிரஸ் போட்டியிடும்

ரூ. 4 கோடிவரை கட்சிக்கு செலவாகும்.

வரப்போகும் பொதுத் தேர்தலில் 4700 ஸ்தானங்களுக்கும் காங்கிரஸ் தன் அபேட்சகர்களை நிறுத்த விருக்கிறது. நியமனப் பத்திரங்கள் செப்டம்பரில் தாக்கல் செய்யப்பட வேண்டியிருக்கும் என்று காங்கிரஸ் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மொத்த ஸ்தானங்கள் 100-க்கு 80 அல்லது 90 ஸ்தானங்களை பெற

முடியும் என்று காங்கிரஸ் எதிர்பார்க்கிறது. காங்கிஸ் தேர்தலில் வெற்றி பெறுவதில் குறியாக இல்லை, சரியான ஆட்களை தேர்தலுக்கு நிறுத்தவேண்டுமே என்ற கவலைப்படுவதாகவே தெரிகிறது.

ஒவ்வொரு அபேட்சகருக்கும் ஆகும் செலவு ரூ. 10000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த செலவை மத்யராஜ்ய காங்கிரஸ் ஸ்தாபனங்களும் அபேட்சகருமாக பகிர்ந்துகொள்ளவேண்டும்.

இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி ரூ. 4 கோடிவரை செலவிடவேண்டியிருக்கும்.

ஆசிரியர் குறிப்பு. தேர்தல் செலவின் ஒரு பாகத்தையோ, அல்லது முழுவதையுமோ, அபேட்சகர்கள் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்பது சரியான யோசனையல்ல. அது பண மூட்டைகளை அபரிமிதமாக காங்கிரஸில் புகுத்தப்பார்க்கும் தகாத யோசனையாகும். உண்மையான ஜனநாயக ஆட்சிக்கு பணக்காரர்கள், செலவிடக் கூடியவர் மட்டும் போதாது. மூளை பலமும், ஆற்றலுமுடைய-தகுதி வாய்ந்தவர்களை காங்கிரஸ்சபை பண முதவி அவர்கள் உழைப்பை நாட்டின் நலனுக்காகப் பெற்றுத் தருவதே முறையும், நீதியுமாகும்.

இனி என்ன செய்ய வேண்டும் ?

S. R. தங்கவேலாச்சர்ரியார்.
N. Ry. லேளடேல்

தலைப்பைப் பார்த்ததும் நான் ஏதோ மாயா ஜாலத்தின் மூலமாக நமது சமூகத்தை தற்கால நிலையினின்றும் மேருவின் உச்சிக்குக் கொண்டு செல்வேனென்று அன்பு கூர்ந்து எண்ணாதீர்கள். ஆம், அதுவும் கூடச் செய்துவிடுவேன். ஆனால்! நமதுமா பெரும், மக்களின் ஏகோபித்த அன்பும் ஆதரவும், காணாறு போன்று பெருக்கெடுத்தோடும் உள்ள நெகிழ்ச்சி வேண்டுமே? ஆம், நாம் தமிழ் நாட்டில் 30 லக்ஷம் மக்கள் உள்ளோம். இருப்பினும் என்! எனக்கு எண்ணிக்கையில் நம்பிக்கையில்லை. (quantity, quality) எனக்கு குணத்தில் தான், தரத்தில்தான், ரகத்தில்தான் மிக நம்பிக்கையுண்டு. ஒருபுத்தர் தான் தேன்றினார். ஒரு கிறிஸ்துதான் தோன்றினார். ஒரு முகம்மதுதான் தோன்றினார். என்ன ஆச்சரியம்! உலக சரித்திரமே அவர்களால் உருவாகவில்லையா? எத்தனை சாம்ராஜ்யங்களின் கதியை, உறுதியை அவர்கள் நிர்ணயித்தார்கள். எனவே, நமது மக்கள் உயர்ந்த குணப் பண்பினராக, தரத்தினராகத் திகழவேண்டும். தனி மனிதனுக்கு ஏற்பட்ட இழுக்கு சமூகத்தையே பாதிக்குமென எண்ணல் வேண்டும். இனி நாம் உடனடியாக என்ன செய்தால் நமது குலப்பெருமை உயரும்? நமக்கு நியாயமாக உரிய உயர்ந்த சமூக அந்தஸ்தை அடைய முடியுமாவென நோக்குவோம்.

சமூக ரீதியாக நோக்கினால் நாம் ஓர் கட்டுக் கோப்புள்ள உயர்ந்த கட்டு திட்டங்களுக்குட்பட்ட ஒரு சமூக அமைப்பே இருப்பினும் நாம் ஏன் சொல்லிலும், செயலிலும், சிறுபான்மையினராகத் தோன்றுகின்றோமென்றால் நமக்குள் ஏராளமான சில்லரைப் பூசல்களும் பெரியவன், சிறியவன் என்ற தப்பபிப்ராயங்களும் மலிந்து கிடக்கின்றன. இது ஓர் பயங்கரமான நிலை. இவை சமூகத்தையே அரித்துத் தின்னும் நச்சுப்புழு. இந்த சின்னஞ்சிறு, வேற்றுமைகளும் கண்டோர் எள்ளி நகையாடும் அறிவிற்கொவ்வாத, அநாசார அபிப்பிராயங்களும் மண்ணோடு மண்ணாய்ப்போதல் வேண்டும். நாமெல்லோரும் விஸ்வேஸ்வரர் குழந்தைகள். அவர் முன்பாக நாமெல்லோரும் சமம் என நினைத்தல் வேண்டும். உண்டு, உறவாடல், கொள்வனை, கொடுப்பனை, தாராளமாக நடைபெறல் வேண்டும். மகா அறிவாளியாகிய பண்டித மதன் மோகன மாளவியா அவர்கள் என்ன சொன்னார்கள்? பிராமண சமூகம் ஒரு சமூகமாக நன்கு விவரிக்க வேண்டுமானால், அச்சமுகத்தின் எல்லா பிரிவினரும் தங்களுள் சிறிதும் அபிப்பிராய பேதமின்றி கொள்வனை, கொடுப்பனை செய்துகொள்ள வேண்டுமென்றார். ஆகா! என்ன அமர வாடிக்கு. அப்பெரியோரின் வாக்கு நமது சமூகத்திற்கு என்ன அழகாகப் பொருந்துகின்றது. நமது குலப் பெரியோர்கள் தைரியமாக, தார்மீக உணர்ச்சியோடு ஆத்ம சுத்தியோடு இப்பிரச்னையை அணுகவேண்டும். இது மிக்க சிக்கலான பிரச்னைதான்: புரட்சிகரமானதுதான்; சிந்தனையைக் கிளரக் கூடியதுதான். என் செய்வது? பெரும் மகோன்னத காரியங்களைச் சாதிக்க நாம் சிறிது அபிப்பிராயத் தியாகங்கள் செய்துதான் ஆகவேண்டும். நம் கண்முன்பாகவே வைதிகத்தின் கோட்டைகளென விளங்கிய சமூகங்கள் என்ன ஒழுங்கோடு காலத்தின் நாடியை அறிந்து தங்களை ஒரே இரவில் மாற்றி அமைத்துக்கொண்டன. நான் சொல்லும் எண்ணங்களுக்கு உடனடியாக உருவங்கொடுங்க முடியாவிட்டாலும் நமது பெரியோர்கள் ஒருங்குகூடி எல்லோருக்கும் ஒப்ப முடிந்ததான வழிகளை வகுத்தல் வேண்டும். பெண்கள் உள்ளோரும், ஆண்கள் உள்ளோரும் ஒருவரையொருவர் அறிந்துகொள்வதற்கேதுவாக (Marriage Bureau) நமக்கு ஓர் திருமண நிலையம் இருத்தல்வேண்டும். பெண்களையும், ஆண்களைப்பற்றியுமாகிய முக்கிய விஷயங்களை நாம் இங்கிலையத்திற்குத் தெரியப்படுத்தவேண்டும். இந்த ஏற்பாட்டினால் எத்தனை பணத்தை நாம் மிச்சமாக்கலாம்! தேக சிரமமோ சிறிதுமில்லை. ஏதோ புது நூதனமான எண்ணமென்று எண்ணாதீர்கள். நான் தினங்காணும் காக்ஷியைத்தான் உங்களுக்குச் சொல்லுகின்றேன்.

அரசியலிலே நாம் மிக்க பின்னடைந்துள்ளோம். காரணம் இராமனாண்டாலென்ன, இராவணனாண்டாலென்ன என்னும் பொறுப்பற்ற, தேக்கமுற்ற, செயலற்ற பிற்போக்குணர்ச்சியேயாகும். நம்மக்களுள் மோனை எதுகையோடு, அணியாக, அடுக்கடுக்காகப் பேசும் ஆற்றல் வாய்ந்த பேச்சாளர்கள் ஏராளமாகவுண்டு. ஆனால் அரசியல் உலகிலே அவர்கள் பெயர்கள் எங்கே? பாலைவனத்திலே காய்ந்த வெண் நிலவு போன்று கண் குளிரக்காணாது, இன்புறாது பயனற்றுப் போவது போன்று பெயரளவிலே அங்கங்கே உள்ளார்கள். நாம் தேசத்தின் முற்போக்குச் சக்திகளோடு சேர்ந்துகொண்டு, தேச நலத்தை மனதில் கொண்டு அரசாங்கத்திற்குப் பக்க பலமாகயிருத்தல் வேண்டும். நமது நாவன்மையால், நமது உண்மை உழைப்பால் பாஞ்சாயத்து போர்டு அங்கத்தினர் ஸ்தானத்திலிருந்து டெல்லி பாராளுமன்றத்தின் அங்கத்தினர் ஸ்தானம் வரைக்கும் நாம் போட்டி இடல் வேண்டும். நமது

புனிதமான தேசபக்தி, நாவான்மை, மனோவன்மை, தியானம் நிச்சயமாக நம்மை நமக்கு உரித்தான உன்னத ஸ்தானங்களில் அமர்த்தும். நமது சக்திகள், கேவலம் தேசத்தின் பிற்போக்குச் சக்திகளுக்கும், நிரீஸ்வரவிதண்டாவாதக் கொள்கைகளுக்கும் விரயமாகக்கூடாது. தேச விடுதலைப் போராட்டத்திலே நம் மக்கள் முன்னணியில் நின்றார்கள், கணக்கற்ற தியாகங்கள் செய்தார்கள். செய்து மென்! அன்னையின் கொடி யேந்தி கூட்டத்தின் முன்னணியில் தொண்டனுகச் சென்றது மிச்சம். அதன் பலனையும், புகழையும், பதவியையும் கூட்டத்திலேயே கலவாதவன் அடைந்ததுதான் நாம் காணும் காக்ஷி. என்கடன் "பணி செய்து கிடப்பதே" "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லால் வேறொன்றறியேன் பராபரமே" என்னும் அமர வாக்குகள் விஸ்வகர்மனது தனிப் பெரும் பண்பிற்கு என்றும் பொருந்துவனவாகும்.

பொருளாதாரத் துறையிலே பெரும்பணக்காரர்கள் அதிகம் இலர் என்பது நன்கு தெரிந்த விஷயம். ஏன்? இரண்டு, உலக மகாயுத்தங்களிலும் இலக்ஷக்கணக்கான பிற சமூக மக்கள், நேரடியாக யுத்தத்திலும், அதன் விளைவாக ஏற்பட்ட எண்ணற்ற தொழிற்சாலைகளிலும் மிலிடெரி, சப்ளை, கான்ராக்ட் போன்ற வியாபாரங்களிலும் தீவிரமாக உட்புகுந்து கர்மமே கண்ணுக உழைத்து கோடி கோடி திரவியத்தை வெகு சீக்கிரத்தில் சம்பாதித்துக்கொண்டார்கள். அவர்களைக் கண்டு நாம் களிப்பேருவகை கொள்ளவேண்டும். அவர்கள் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கண்டு வியந்து வியந்து போற்றவேண்டும். அப்பொழுது நமது மக்கள் வாளா இருந்துவிட்டாரகள் தொழிற்சாலைகளில், இரும்பையும். செம்பையும் அடித்து நொறுக்கி உழைத்தார்களென்பது உண்மைதான். அதன் பயனை அநுபவித்தார்களா? நமது மக்கள் பொருளாதாரத் துறையிலும் மற்ற மக்களோடு (Robust and healthy competition spirit) சரிநிகர் சமானமாக உழைத்து ஏராளமாக பொருளீட்டவேண்டும். சுற்றுப்புற உலக நிகழ்ச்சிகளைக் கண்டும், காலத்தை அளந்தும் அப்போதைக்கப்போது ஏற்ற நூதனமான தொழில் வகையை ஆரம்பித்தல் வேண்டும். தற்கால ரீதியிலே "ஒருவன் பலருக்காக, பலர் ஒருவனுக்காக" என உழைக்கும், ஐக்கியக் கூட்டுறவு அடிப்படையிலே தமது தொழிற்சாலைகளை அமைத்தல் வேண்டும். (Co-operative Basis) எல்லாத் தொழில்களையும் அரசாங்கத்தின் கண்காணிப்பில், ரிஜிஸ்டர் செய்யப்பெற்று நடத்தல்வேண்டும். அரசாங்கத்திலிருந்து நாம் உபகார நிதி பெறல்வேண்டும். ஓரிரண்டு ஆண்டுகட்குள் அன்னை விஸ்வேஸ்வரியின் திருவருளால் எங்கணும் நமது தொழிற்சாலைகள் ஏற்பட்டு புன் முறுவல் பூத்துவிளங்க வேண்டும். குலமாணிக்கங்களாகிய பிரம்மஸ்ரீ-குலத்தாரகப் பெரியாரும், காந்தர்வகான திரு. M. K. தியாகராஜபாகவதரும், தொழில் சிந்தனைச் சிற்பி திரு. T. சந்திரசேகர ஆச்சாரியார் இருக்கும் போது நமக்கு என்ன குறை! எங்கும் வசந்தமும் வண்ணப் பூஞ் சோலையுந்தான். இனி லபித கலைகளில் நாம் எந்நிலையில் உள்ளோம் என்று நோக்குவோம். நிச்சயமாகச் சொல்லுகின்றேன், நாம் மிக்க முன்னேறியுள்ளோம். ஆனல் பத்திரிகைகள் நமதுகையிலில்லை. கலைகளைப் பற்றி விமர்சனம் செய்ய அருகதையுள்ளவர்கள் ஏனே, ரோஜாவை ரோஜா என்று அழைக்க அலமருகின்றார்கள். மதிப்பிடக்கரிய மாணிக்கத்தை மாணிக்கமென்று சொல்லக் கூசுகின்றார்கள். நம்மைக் காட்டிலும் அவர்களுக்குத்தான் காரணம் நன்கு தெரியும். காந்தர்வகான ஏழிசை மன்னர் பிரம்மஸ்ரீ M. K. தியாகராஜ பாகவதரையும், அமுத மழை பொழியும் M. M. மாரியப்பாவையும், இன்னிசை அரசன் திருச்சி லோகநாதனையும் தமிழகம் போற்றிப் புகழவேண்டும். அவர்களால் நாவலர் தீவிற்கே ஓர் தனிப் பெருங் கௌரவம். முன்னணியிலுள்ள ஓர் அரசியல்வாதி போன்று ஓர் சீர்திருத்திவாதி போன்று, ஓர் விஞ்ஞானிபோன்று ஓர் சரித்திராசிரியன்போன்று இவர்களை உன்னதமான நிலையிலிருத்தி நமது தமிழகத்தின் கருவூலமெனப் போற்றிப் புகழவேண்டும். எந்தச் சமூகம் எந்த நாடு கலைஞர்களை பாதுகாத்துப் போற்றிப் புகழ்ந்து இன்புறுகின்றதோ அந்தச் சமூகமே தெய்வீக சமூகம். அந்த நாடே அமர நாடு. அந்நாட்டை நமது சமூகம் சென்றடைவ தெந்நாள்?

"நமது குலமும் சமூக நிலையும்"

ஸ்ரீ. சே. வேலாயுத பிள்ளை
(ஆச்சாரியார்) B. A. Honrs.
யாழ்ப்பாணம்.

இன்றைய உலகம் அறிவிற்கு முதன்மை அளித்துவருகின்றது. அறிவே மக்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படை. அறிவு வளர்ச்சி இன்றேல், மக்களினத்தின் முற்போக்கு வளர்ச்சியும் இன்றாம். உயிர் நூலறிஞர் கூறும் கூர்தலறம் (Evolution) மூளை வளர்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது. மக்களின் மூளைவளர்வது போலவே, மக்களினம் ஈட்டிவரும் அறிவுச்செல்வமும் பெருகிவருகின்றது. அறிவுக்கு முதன்மை வழங்கும் இவ்வுலகம் அறிஞரையே தலைவராகக் கொள்ளவேண்டும். ஆனல் இந்நிலைமை இன்னும் வந்தெய்தவில்லை. பணத்துக்கும், பதவிக்கும்பெருமை கொடுப்பதை எங்கும் காணலாம். இதனல் அறியாமை என்னும் இருள் உலகின் பெரும்பகுதியை இன்னும் மூடிக்கொண்டே இருக்கின்றதென்பது புலனுகின்றது. ஆயின், இவ்வறியாமையிருள், மக்களினத்தை விட்டு முற்றாக அகலுமோ என்பது ஐயத்துக் கிடமானதே. அறிவுக் கதிரவன் அடிவானத்திலேயே இன்னும் அரைகுறையாகத் தோற்றமளிக்கிறான். இதனல் உண்மை அறிவொளி பெற்றவர் மிகச் சிலரே. பலர் பாதியிருளிலும், பாதி ஒளியிலும் இருக்கின்றனர். இன்னும் பலர் முழு இருளில் மூழ்கி இருக்கின்றனர். முழு ஒளியில் இருப்பவரே மெய்யறிவுடன் உள்ளதை உள்ளவாறு உணரும் நிலையில் இருக்கின்றனர். பாதி ஒளியிலிருப்பவர் தெளிவின்றிப் போலியறிவை மெய்யறிவென எண்ணி மயங்கியிருக்கின்றனர். முழு இருளில் இருப்பவர் தமக்கென ஒருதனியறிவின்றிப் பிறர் கூறுவதை வழிமொழிந்து பேதையராக வாழ்கின்றனர். இதுவே நமது நாட்டு மக்களின் நிலைமை.

சாதி பற்றி உயர்வு தாழ்வு கூறுபவர் உண்மை அறிவின் துணைக்

கொண்டு கூறுகின்றனரா? உள்ளதை உள்ளவாறு உணரும் ஆற்றலுடையவரா? ஆடுமாடுகளைப்போற் றமக்கென அறிவில்லாது பிறர்கூறுவதையே தாமுங் கூறுபவரா? இவ்வினாக்களுக்கு விடைகாணப்புகின் மக்களின் அறிவுபற்றியான் முன்னர்க் கூறியதன் உண்மை புலனாகும்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்று ஒருவர் அறிவின் எல்லையில் நின்று கூறினர். ஆயின் அவ்வறிஞர் கூறிய உண்மையை உணருபவர் எத்தனைபேர்? உணர்ந்ததை நடைமுறையிற் கொண்டுவருபவர் எத்தனை பேர்? பார்ப்பானொருவன் பசுக்கொலை புரிந்தவனேயானாலும், பிறப்புநோக்கிப்பெருமை பெறுகின்றான். மற்றுப் புலையனொருவன் அறநெறியறிந்து குறைவற முயல்பவனெனினும், பிறப்பு நோக்கி இகழப்படுகின்றான். இவ்வாறு பிறப்பு நோக்கிப் பெருமை சிறுமைபேசுவதில் பொருளில்லை என்பதே திருவள்ளுவர் போன்ற அறிஞரின் துணிபு. ஆனால் அறியாமையும் ஆணவமுனைப்பும் கொண்ட மக்கள் பிறப்பு ஒன்றைக் கொண்டே பெருமை சிறுமை பேசி வருகின்றனர்.

விஸ்வகர்மர் எனக்கூறப்படும் கொல்லர், தச்சர், கன்னார், சிற்பியர் தட்டார், ஆகிய ஐந்தொழிலாளர்களும் செய்துவரும் தொழில் எவ்வகையினும் உயர்வுடையதென்பதை அறிவுலகம் மறுக்கவோ, மறைக்கவோ முன் வரமாட்டாது. எவ்விதமாக நோக்கினும் இத்தொழில்களுக்கு இழிவு கூறுதற்கிடமில்லை. படைத்தற்றொழில் இறைவனுக்குரியதெனக் கூறுவதை ஒப்புக்கொள்வாரெல்லாரும், இவ்வைந் தொழிலாளர்களும் இறைவனுக்குரிய உயரிய தொழிலையே செய்கின்றனரென ஒப்புக்கொள்ளவேண்டியவராகின்றார். மேலும் மக்கள் சமூகத்தில் சீரியவாழ்வு நடாத்த வேண்டின் இவ்வைங் குழுவினரின் ஆதரவை நாடியே நிற்கின்றனர். நுண் தொழில் புரிபவரான இவர் நுண்ணறிவுடையவரென்பதும் உண்மையே. கைத்திறமும், நுண்ணறிவும், கலையுணர்வும், கவின்நயப்பும் ஒருங்கமைந்த குழுவினர் சமூகத்தின் முடிமணிகளாக விளங்க வேண்டியவரன்றோ? ஆயின் நம் நாட்டில் இவர்களின் நிலை யென்ன? கலைஞரைக் காலால் மிதிக்க முற்பட்டது பலசமூகம். கண்மூடித்தனமாக இருந்தமையாற் பிறர் இவரை இழி தொழிலாளா எனக் கூறியும் ஏட்டில் எழுதியும் வந்தனர். பொறாமை செய்யும் புன்மைதானென்னே! தம்மை யுயர்ந்த சாதியினர் எனக் கூறவேண்டி, உண்மையுயர்வுடைய ஒரு குழுவினரைத் தாழ்த்தி ஒதுக்க முற்பட்டனர். ஒதுக்கியே வந்தனர். இறந்த காலத்தை நினைத்து வருந்திவாளாவிருப்பது பயனற்றது. இனி நம்குலத்தவர் விழிக்கவேண்டும்; முயலவேண்டும்; முறையை நிறுவவேண்டும்; முதன்மை எய்தவேண்டும்.

மக்கட்டொகைக் குறைவினாலும், பொருள் வளச் சுருக்கத்தாலும், கல்வியறிவுக்குறைவாலும், இக்குழுவினர் சமூகத்தின் இன்னல்களுக்கு இரையானார்கள். அடிமை மனப்பான்மையே நம்மவரிடைக் குடி புகுந்துவிட்டது. சாதியிறுமாப்புக் கொண்ட பிறர்தமக்கு நம்மவர் தலை வணங்குவதும், பல்லைக்காட்டுவதும் வருந்தத்தக்கதே. ஆன்றவிந் தடங்கிய சான்றோரின் பணிவு வேறு. நம்மவர் பணிவு வேறு. முன்னது பெருமையின் அறிகுறி; பின்னது அடிமையின் சிறுநெறி. இவ்வடிமை மனப்பான்மை அகலவேண்டும். பிறர்க்கெல்லாம் எவ்வகையிலும் நாம் பிறப்பாற் குறைந்தவரில்லை என்னும் உறுதியான மனப்பான்மை ஒவ்வொருவர் உள்ளத்திலும் வேரூன்றவேண்டும். நமது குலத்தின் உயர்வு கூறவேண்டிப் பிறரை இழித்துக் கூறுவது நம் பெருமைக்கு அடுக்காது. நாய் கோபித்துக் கௌவினால் நாம் நாயைக் கௌவுதல் இல்லையன்றோ! பிறரைப்பழிப்பதினால் நம்பெருமை நிலை பெற்றுவிடாது. நம் பெருமையை நாமுணரவேண்டும். உணர்ந்து, பெருமைக்கு இழுக்கு நேராவழி முயலவேண்டும்; முயன்று முன்னேற வேண்டும்.

நாம் "விஸ்வப்பிராமணர்" என்று கூறிய அளவில் நின்றுவிட்டால் அதனாற் பெருமை வரப்போவதில்லை. "தம்மை உயர்ந்த சாதியினர் எனக் கூறுவோர்க்கெல்லாம் நாம் எவ்வகையிலும் தாழ்ந்தவரல்லோம்" என்னும் உண்மைத்துணிவு வளருவதற்கு உண்மை அறிவு வேண்டும்; உண்மை அறிவு பிறப்பதற்கு உயர்தரக் கல்விவேண்டும்; உயர்தரக்கல்வி பெறுவதற்குச் செல்வம் பெருகிவளர வேண்டும்; செல்வம்பெருகுவதற்கு ஒற்றுமையும்ஒத்துழைப்பும், விடாமுயற்சியும், நேர்மையும் வேண்டும். ஆனால் இவைகள் நம் குலத்தவரிடைப் பெரும்பாலும் காணப்படாத குறைபாடுகளே. ஒற்றுமை யின்மை நம் குலத்தவரிடைக் காணப்படும் பெருங் குறைபாடு. இழிவு மனப்பான்மை (Inferiorty Complex) நம் குலப்பெருமையைப்பாழாக்கும் நச்சுக்கிருமி. கல்வி வளராமைக்குக் காரணம் வறுமை. 'மாமியும் மருகியும் மருவி வாழ்தல் அரிது' என்பது நம்நாட்டுப் பழமொழி. கலைமகளுறவை நாடும் நங்குலத்தவர் அலைமகள் அருளைப் பெறுதல் அரிதாகவே இருக்கின்றது. எனினும் 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்னும் பொய்யா மொழியை கைக்கொண்டு, உண்மை நெறியில் முயன்று பொருளீட்டல் வேண்டும். எனவே தன்மானம், கல்வி, மெய்யறிவு, ஒற்றுமை ஒத்துழைப்பு, செல்வம் நேர்மை, கலையோம்பல் ஆகிய பண்புகளினால் நம்மவர் நிலையான புகழெய்திக் குல விளக்குகளாக விளங்க வேண்டுமென்பது இதுகாறுங் கூறியவற்றால் போதரும்.

———

"எனது உள்ளக் கொதிப்பு"

விஸ்வகர்ம தொழிலாளிகளே!
குலாபிமானிகளே!
ஸ்ரீ. கோ. தனக்கோடி ஆச்சாரியார், புள்ளம்படி எழுதுவது:

நமது நாட்டின் வருங்கால நிலைகளைத் தெரிந்து பிறகு சமுதாய மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருவதை நாமறிந்து வருகின்றோம். ஒவ்வொரு சமுதாயங்களும் தம் தம் முயற்சியின் பயனை ஆவன செய்து, அரசியல் வழிகளில் சென்று தன்னுடைய குறைகளையும் அகற்றி தன் சமுதாயத்தின் பொருளாதாரத்தையும், கலாசாரத்தையும் முன்னேற்றிக் கொண்டு சுகமாகவாழப் பயன் செய்து வருகின்றார்கள்.

அந்தோ! நம் சமுதாய மக்கள் உயர்ந்த குலமென்றும், உலகுக்கே, ஆணிவேரான உயர்ந்ததொழிலென்றும், ஏட்டில் எழுதியும், வாயால் வர்ணித்தும் பறைசாற்றி வருகின்றோம். வருவதுகண்டு நாம் வானமளாவ ஆனந்த மடைகின்றோம்.

ஒரு கடின இரும்பான உளிக்கு நெக்கு விடாப்பாறை (மலை) ஓரறிவு படைத்த தாவரப் பூண்டு வேருக்கு நெக்கு விடுகின்றதே!

ஆணிவேரான நாம், உலக மக்களுக்கு உயிர் பிழைக்க உதவும் மக்களாச்சுதே. நாட்டு அரசியல் அமைச்சர் குழாங்களில் நம்மைப் புகுத்தி, நமது குறைகளைப் போக்க இடம் கொடுக்கின்றார்களா ? இல்லவே இல்லையே. இப்படிப் பட்ட வஞ்ச மனம் படைத்த மக்களுடன் வாழ்ந்தும், எல்லா மக்களுக்கும் சிறு விடுதி முதல் பெரிய அரண்மனைவரை. நாட்டும் நம் மக்கள் ஆத்மசக்தியின் மன நிலை (கூர்மை, புத்தி, நுட்ப)க் கலையின் சிறப்பால் அமைத்துக் கொடுத்த நம்மக்களுக்கு நகரங்களிலும், நாடுகளிலும் அவர்களைப் போல் வாழவும் குடியிருக்க இடமில்லாதும் பொருளில்லாதும் தவித்து தயங்கி வாடி வாழ்ந்து வருவதைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறதன்றோ !

உலக மக்களால் ஒதுக்கப்பட்ட ஒரு கூட்டங்களுக்கு, அரசியல் துறையில் எவ்வளவு சலுகைகள் கிடைத்து முன்னுக்குக் கொண்டு வருகின்ற இக்கால இவ்வரசியலில் புகுந்து, அவன் உச்சநிலையில் செயலாற்றி தம்மக்களுடைய அடிமைத் தளையை நீக்கி, எம் மக்களையும் தம்முள்ளடக்கிக் கொண்டு வருகின்றார்களே. அந்தோ, நம் ஆன்றோர்களால், சட்டம் (சாத்திரம்) வகுத்து அதன்படி மக்கள் நடந்து அதன் பயனை அனுபவிக்க எழுதுகோல் கொடுத்தவனுக்கு சற்று கூட உட்கார்ந்து நீதியைப் புகட்ட இடமில்லை யென்றால் இதைவிட ஆச்சரியம் ஒன்று வேண்டுமா இவ்வுலகில்!

பெரியோர்களே ! அறிவு நிறைந்தவர்களே ! காலம் வீணப்போகின்றது. நாம் கருதும் எண்ண மெல்லாம் கழிந்து போகின்றது. வருங்காலம் குறுகுகின்றது. அரசியலில் மக்கள் புகுவதற்கு காலநிலை கடுகி வருகின்றது. அது தெரிந்தும் நம் அறிவு நிறைந்த மக்கள் யாவரும் வாளாவிருக்காமல் இன்றே முயன்று ஆவன செய்ய ஆங்காங்கு தக்க மக்களைத் தட்டியெழுப்பி நகரங்களிலும், நாடுகளிலும் சென்று, கூட்டங்களும், சங்கங்களும் உண்டு பண்ணி பாமர மக்களைத் தூண்டி விட வேண்டாமா? நாம் மகாநாடு கூட்டி விட்டோம்; எல்லாம் முடிந்து விட்டது; இனி நாம் மேலே சென்று விடுவோம் என்று நினைக்கும் தன்மையுடையது தவறு. நம் மக்களை உய்விக்க வழிதேட தக்க சமயத்தை நழுவ விடாது பாடுபட வேண்டியதவசியம்.

பண்புடையார் பட்டுண்டுலக
மதுவின்றேன்
பண்புக்கு மாய்வது மன். (குறள்)

பண்புடையாரைச்சார்ந்துதான் இவ்வுலகியல் நிலைத்துள்ளது. அங்ஙனம் சாரவில்லையாயின் ஆழ மண்ணுட் புகுந்து அது மாய்ந்து போம், என்பதும் குணமுடைய நல்லோரைப் பொருந்த விலையாயின், இவ்வுலகம் மணமிழந்த மலர்போல் மாண்பிழந்து படும் என்ற கருத்துக்கிணங்க,

மதியடையா வானம் போல்
மருளுமே வையம்
மதியுடையார் மேவா வழி
“சைவீரபாண்டியனார்” (குறள்)

சந்திரனில்லா வானம் இருளடைந்து விடும். அதுபோல் அறிவுடையாரைப் பொருந்த வில்லையாயின் இவ்வுலகம் சிறந்து நில்லாதென்பது தெளிவு என்பது போல்,

பலப் பல நாள்களாகத் தொண்டெனப் பாடுபட பிறவிக் கடமையென வந்த ஜீவிய ஆலோசகர் தெய்வசிகாமணியார் நம்மக்களுக்கு வேண்டிய அளவு வேண்டிய வாழ்க்கைப்பயனை அன்னார் கண்குளிரக்கண்டு களிக்க வேண்டும். நம் தெய்வமணிக்குப் பல்லாண்டுபல்லாண்டாக ஆயுள் நிறைவு கொடுக்க விஸ்வேஸ்வரனை மனமுவந்து பிரார்த்தித்து வேண்டிக்கொள்ளுகிறேன். அவ்வண்ணமே நம்மக்களனைவரும் வேண்டிக்கொள்ள வேண்டுகிறேன்.

உலக வண்டியை ஓட்டவும், அதே வண்டியை நிறுத்திக் காட்டவும் திறவு கோல் நம் கையிலிருக்கின்றது. நாம் இந்த நாட்டை (“ஐந்து தொழிலீடுபட்ட எக்குலத்தினரானாலும்”) ஸ்தம்பிக்கச் செய்ய எண்ணினால் ஒரு வாரத்தில் உலக மக்கள் அல்லோல கல்லோலமாய் விடுவரே.

“அவனசைந்தால் அகிலமும்
அசையும்” என்பதுபோல்
“நாம் அயர்ந்தால் அகிலமும்
அயர்ந்து விடும்”

ஐயன்மீர்,

இதை எழுதியது நம் மக்களிருக்கின்ற நிலையையும் பிறமக்கள் எல்லாத்துறைகளிலும் பயன் பெற்று வருவதையும், நமக்கு ஜென்ம விரோதியான கூட்டங்கள் எத்துறையிலும் முதன்மைத்தானம் பெற்று வாழ்வதைப் பார்த்தும், அவன் அடிவருடி ஆண்டவனே யென்று கும்பிடும் ஆண்களும், அவனுடன் ஒத்து நம்மை ஏளனம் செய்து வருகின்றதே என்ற பொறுமையாலும் கொல்லு, தச்சு, கன்னார், சிற்பி, தட்டாரால் குடும்ப வாழ்க்கை செய்து வருபவர்கள், நம்மை ஒதுக்கியும் தாம் வாழக்கொடுத்தவனுக்கு அவன் (விஸ்வகர்ம மக்கள்) வாழக் கூடாது என்ற வஞ்சகக் கூட்டத்தார்கள் நிறைந்த உலகோடு வாழ்வது கண்டு சீற்றங்கொண்டு இப்படியெழுத நேர்ந்தது. என்னுடைய உள்ளக் கொதிப்பில் தவறான சொற்கள் இருக்கலாம். அதை நீக்கி என்னை மன்னியுங்கள். இனி காலந்தாழ்த்தாது கூடியவரை நாம் முன்னேறும்படி நமது மத்திய மகா சங்கம் நம் மக்களுக்கென பாடுபட வேண்டி வீரம் ததும்பி, வீரவாள் கைக்கொண்டு அரசியலில் புகுந்து விட்டது. சில பெரியார்களும் அணுகி இருக்கின்றார்கள். நம் மக்கள் யாவரும் ஒரு மனப்பட்டு இன்றே நமது வாழ்வு நிலைத்துவிட்டது, உயர்வடைந்தோம்! உய்ந்தோம்!! உயர்ந்தோம்!!! என ஆர்வத்தோடு ஆண்டவன் விஸ்வேஸ்வரன் துணையென எழுந்து இந்நாட்டை விஸ்வகர்ம நாடாக்க ஆவல்கொண்டு ஒன்று கூடி எழுந்தோமானால் நாம் சிருஷ்டித்த இந்நாட்டைக்கூட நாமே ஆளலாமேயென உள்ளங்கொதிக்கிறது; குதிக்கின்றது.

விஸ்வகர்ம மக்களே! நமது கலாநிதியில் மிக மிக அறிவு நிறைந்தவர்களும், குலாபிமானிகளும், நம் பெருமை, வீரம், தீரம், குலம், கலாசாரம், தொழில், ஒழுக்கம், ஊக்கம், இவைபோன்ற பேருரைகளை தங்கள் தம் உள்ளத் தெழுச்சியை, எழுதி எழுதி மண்டையை உடைத்துக் கொள்ளுகின்றார்களே! தான் வாழவா, இல்லை! இல்லை!! நாம் ஒரு வயிற்று மக்களாச்சே; இன்று நாம் க்ஷீணமடைந்து சீர் குலைந்து சிறப்படையவில்லையே என்ற உள்ளங் கொதித்து, எழுதுபவர்களில் யானொருவன்; என் உள்ளக்கொதிப்பை எழுதலாயினேன். அன்பர்களே! நீங்கள் என் பேரில் சீற்றங்கொண்டு இவன் என்ன அறிவுடையவன்; நாம் அறிவில்லாதவர்களா, நமது மத்திய மகா சங்கத்தை விட்டுவிடவா போகின்றோம்; நமது விஸ்வகலாநிதியை விரட்டி விடவா போகின்றோம்; இனி விடப்போவதில்லை, இல்லை. என மார்தட்டி இரு புஜங்களும்

பூரித்து எழுந்து வந்தால் நமது விஸ்வகலா நிதியின் பக்கங்கள் 30 முப்பதுக்கு (60) அறுபதும்) மாதமிருமுறை என்பதை வாரமாயும், அல்லது தினசரியாகவும் செய்து விடலாமே. அச்சகமும் அயர்ந்து படாமல் ஆசைப்படுமே!

குலாபிமான இளஞ் சிங்கக் குருளைகளே! வருங்கால நிலையில் சிறப்படைய வேண்டிய கரும நலன்களைப் பண்புப்படுத்தி அதனாலடையும் ஆற்றல்களை நீங்கள் தான் அனுபவிக்கவேண்டிய பொறுப்பு, உங்கள் தலையில் சுமக்க தொடர்ந்து வருகின்றது என்பதைத் தெரிந்து, நமது குலம் நலம் பெற எதுதேவை என்று ஆராயவேண்டிய தவசியம் அல்லவா?

இத்தேசத்தில் விஸ்வகர்ம திலகமென, புத்தி, நுட்பம், சிற்பம், சித்திரங்களில் முன்னணியிலிருந்து வந்த சமுதாயமாகிய நாம் இக்கால நிலையில் நமது வாழ்க்கையில் எப்படி இருக்கின்றோமென்று சிந்திக்கும் போது கிணற்றின் தவளை தாமிருக்குமிடமே பெரிய சமுத்திரமாகவும் இதைவிட வேறு சமுத்திரம் உலகில் இல்லையென நினைக்குந் தன்மைபோல் அறிவின்மையும், கண்மூடித்தனமுமாய்க் காலங்கழித்துக் காலத்தை வியர்த்தமாக்கவா மேன்மையுடைய விஸ்வகுலமக்களாகப் பிறந்தோம்?

அந்தோ! கடவுள் ஆறறிவைக் கொடுத்து அவ்வறிவால் பகுத்தறிந்து நல்வழிகளில் செலவிடாது தீய வழிகளில் புகுந்து அநியாயமாய் அழிந்து படவா விஸ்வேஸ்வரன் நம்மைப் படைத்தார்.

விஸ்வகர்மர்களே! நம் வாழ்நாளை வீணாக்காது இனியாகிலும் செம்மையாக நடந்து கொள்ள மனத்தைத் தீயவழிகளில் செல்லவிடாது அறிவு நிறைந்த தலைவர்கள்பால் நேசித்து அவர்களின் நற்செய்கைகளையும், நற்செய்திகளையும் அனுசரித்து, ஆங்காங்கு ஆன்றோர்கள் சங்கங்கள் குழுமிய இடங்கள்தோறும் சென்று அன்னார்கள் அரும் பெரும் பேருரைகளைக் கேட்டு நன்னடை, நட்பு, ஒற்றுமை, உலகானுபவம், ஊக்கம், முயற்சி, நேர்மை, சீர்மை, தெய்வபக்தி இவைபோன்ற பல பயில வேண்டுமானால், நமக்கு எது தேவை என்பதை முதலில் அறிய வேண்டும்.

உலகவியல்பிற்கேற்ப, ஒவ்வொரு விஸ்கவர்ம மக்களும், அறிவு நூல்களையும், குலப்பத்திரிக்கைகளையும் ஆதரிக்க வேண்டும். சாஸ்திரங்களையும், பத்திரிக்கைகளையும் ஆதரிக்காமல் கடவுள் தொண்டான மக்கள் தொண்டைச் செய்யாமலும், நன்னெறிகளி வீடு படாமலிருப்போமானால், மனித உருவத்திற்கு அஃது அழகல்லவே. மனித உருவமெடுத்தோமானாலும், அதுகற்சிலையே. கற்சிலையேயானாலும், ஒருபோது அபிஷேக ஆராதனையுண்டு. உயிர் படைத்த மனித உருவத்திற்கு ஒன்றுமில்லாது, உலக வசையும் இழிவும், துன்பமுந்தான் அடைய முடியும். அதாவது தீராத நரக வேதனையனுபவிக்க (பிறப்பிறப்பு) நேருகிறது. இவைதான் மனிதப் பிறவியடைந்து பூமியில் ஜீவித்திருக்கின்றதனாலாய பயன்

ஆதலால்தான். அறிஞர்கள் உலகானுபவத்திற்கென சாத்திரங்களையும், பத்திரிக்கைகளையும் ஏற்படுத்தி பாமர மக்களுக்கு பரவச் செய்து வருகின்றார்கள். நாம் அவசியம் பத்திரிக்கை, அறிவுநூல், குலநூல், இவைகளை வரவழைத்து ஆழ்ந்து கவனித்துப் படித்து அதன்படி நடக்கவேண்டியது கடமையென்பதை உண்மையென உணர வேண்டும்.

விஸ்வகர்ம மக்களே! பெரும்பாலும் நமது குலப்பத்திரிக்கையான விஸ்வகலாநிதி குலத்தவப் புதல்வனாகத்தோன்றி வருகிறது. அப்புதல்வனை அன்புடன் கையேந்தி வாங்கி ஆதரித்து, அதன் பயனையும். பண்பையும் அடைய வேண்டும். இவ்வுலகம், பத்திரிக்கை வாயிலாக பல சமுதாய மக்கள் முன்னேறி, தம் குல மக்களைத் தட்டி எழுப்பிதான் உச்ச நிலையில் நின்று எல்லா இடங்களிலும் உயர்நிலை பெற்று, கல்வி அதிகாரம், பொருளாதாரத் துறைகளிலே முதன்மையடைந்து வருவது நன்கறிந்து வருகின்றோம். நம் குலம் முன்னேற்ற மடைய வேண்டிய வழிகளை குலப்பத்திரிக்கையை ஆதரித்து அதில் ஒவ்வொரு ஆன்றோர்கள் வரைந்து வரும் குலநலன்களையும் குலத் தொழிலுக்கு வேண்டிய அரிய பேரின்பக் கலைகளையும் கண்ணுற்று நாம் நன்மையடைய யேதுவாக இடமளிக்கும்படி, ஒவ்வொரு விஸ்வகர்மர்களும் உறுதி கொண்டு தன்குடும்பசெலவில் ஒரு நாள் செலவு தானென்றெண்ணி, மனம் துணிந்து பணம் கொடுத்து வாங்கினால் போதுமே! அந்தப் பணம் வீண் போகுமா? போகாது; அது கலாநிதி. அந்தக் கலாநிதியே நமக்குப் பேரின்ப நிதியாய் அறிவு நிதியைக் கொடுத்து நம் வாழ்க்கைக்கு வேண்டியதைத் தந்து ஆக்கமளிக்குமென்பதில் ஐயமில்லை,

குலாபிமானிகளே! நமது ஒரே குலப்பத்திரிக்கையை வாங்கி, அதன் பயனையடையுங்கள் என அறிவுடையவர்கள் வற்புறுத்தி எழுதுவதும், சொல்லுவதும், பூனைக்குப் பால் ஊட்டுவது போல் இருக்கிறது. அஃது எப்படியென்றால், "ஒரு இளம் பூனைக்குட்டியை வளர்க்க ஆசைப் பட்டவன், ஒரு கிண்ணத்தில் பால் வார்த்து அக் குட்டியின் கழுத்தைப் பிடித்து பால் குடிக்க அதன் வாயை பாலில் அழுத்துவான். அப்போது அப்பூனைக் குட்டி என்ன நினைக்கின்றதென்றால் நமது கழுத்தைப் பிடித்து நம்மைக் கொல்ல நினைக்கின்றானென்று அதுபின்புறமாக தலையை இழுத்து கிண்ணத்தின் பாலையும் கொட்டிவிடும். தனக்குபிரயோசனமாக முயற்சியெடுத்தவனுக்கும் கோபத்தையும் மூட்டி விடுகின்றது. பூனை வளர்ப்பவன் பாலின் சுவையையறிந்தால் குடித்துப்பழகி சீக்கிரமாகவளர்ந்து விடுமேயென்ற ஆசையின் காரணமாக, அப்படிச் செய்ய நேருகின்றது. ஆனால் பூனை பால் குடிக்காமல் போகுமா? இவர் கதை கட்டுகிறார் என்று நினைப்பீர்கள். அத்தன்மையை தங்கள், பெரிய பூனையாயினும் சரி, சிறு பூனைக்குட்டியாயினும் சரி அனுபவத்தில் பார்த்தால் புலப்படும். அத்தன்மையைப்போல் நமது மக்கள் எண்ணம் திகில் பிடித்திருக்கின்றது. நமது குலப் பெரியார் மக்கள் தலையை 'கலாநிதி' என்னும் பாலில்.. சுடச்சுட ஆவி பறக்கும் பாலில் பிடித்தழுத்துவது போல் கருதுகிறார்கள்! பின்னடைகிறார்கள் பத்திரிக்கையை வாங்கி படித்தால் அதனால் தமது குடும்பத்திற்கு வருஷ முடிவிற்கோ அல்லது வாழ்நாள் முடிவிற்கோ போதுமென ஆழ்ந்த சிந்தனையில் விழுந்து தமது வீண் செலவை மிச்சப் படுத்தி பல நாள் செலவை இந்த மூன்று ரூபாயைக் கொண்டு குடித்தனம் நடந்து விடுமே என்று நம் குல மக்கள் எண்ணம் போலும்!

நம் மக்கள் தினகாலச் செலவைப் பற்றியும் நமது மக்கள் எண்ணத்தைப் பற்றியும் விரிவுரையாக, தெல்

கட்டுஞ் சேவல், கிராம முன்சீப்பு V. கிருஷ்ணுச்சாரியார், குலப் பத்திரிக்கை அவசியமா என்ற தலைப்பின் கிழ் ('51....பிப்ரவரி மாதம்) நமது விஸ்வகலாநிதியில் பொறிக்கப்பட்ட வாசகத்தை கருத்தூன்றி படித்த மக்களுக்குப் புலப்படாமல் போகாது. ஆதலால் நானும் அதிகம் எழுதினேனேயானல் என்னை அதிகம் படித்தவனுகக் கருதுவார்களென்றும், அன்னர்சொல்லுக்கும், நம் மக்கள் எண்ணத்திற்கும் மாற்று கண்டுபிடிக்க முடியாது போய் விடுமே என்றஞ்சி மன அமைதியாய் இத்துடன் நிறுத்தி விட்டேன்.

உழுவலன்புடையீர்! தமது வறுமையைப் பொருள் படுத்தாது அதை உதறித் தள்ளிவிட்டு நமது குலப் பத்திரிக்கையை அன்புடன் வாவழைத்து நம் குலப்பெரியார்கள் வரைந்துள்ள கல்விச்சுரங்கச் செல்வங்களைக் கருத்தூன்றிப் படித்து நமது வருங்கால மக்களுக்கு பெரு நிதியாகத் திரட்டி வைத்தது போல் அவர்கள் வாழ்க்கைக்கு நலன் தேடி வைப்பது நமது கடமையென எண்ணி நம் குலப் பத்திரிக்கைக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென விஸ்வேஸ்வரனை மன்றாடி வணங்குகின்றேன்.

என்னுடைய உள்ளக் கொதிப்பில் என் சிற்றறிவுக்கு யெட்டியவற்றைக் கொட்டி விட்டேன். அதில் வரைந்துள்ள பொருளகத்தில் தங்களுடைய வாழ்க்கைக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு மற்றதை உதறி எறிந்து விட்டால், அது எங்கும் பாவி உடுக்களாகத் திகழ்ந்து தன் பிரகாசத்தைப் பரவச் செய்யுமென என் உள்ளக் கொதிப்பைத் தெள்ளத் தெளிய எழுதத் துணிந்தேன். விஸ்வேஸ்வரனே அருள் புரிவாராக. வணக்கம்.

வியப்பும் திகைப்பும்.

[வித்வான் ஆர். கே. சுப்பிரமணியன்]
சென்னை.

"படித்தவர்களாவது வேண்டும், இருக்க பட்டம் பெற்றுப் பதவியில் இருப்பவர்களாவது இருக்கவேண்டும், அல்லது பணக்காரர்களாவது இருக்க வேண்டும், இவர்களில் எவருமே இல்லாத இந்த சமூகம் எந்த வகையில் உயர் நிலையடையும்"

"இருக்கிறார்களப்பா! ஆனல் பெருவாரியாக இல்லை; சிறுபான்மையினர் இருக்கிறார்கள்."

"இருக்கிறார்களா! இருந்தால் அவர்கள் மனிதவர்க்கந்தானே? மிருகவர்க்கம், பறவையினங்களெல்லாம் தத்தம் இனத்தைப்பரிந்து பாதுகாக்கும்போது மனிதவர்க்கத்திற்பிறந்து படித்துப்பட்டம் பெற்றும், பதவியிலிருந்தும், பணக்காரர்களாக இருந்தும் ஏன் இவர்கள் இனவுணர்ச்சியின்றி மனம் மாறுபட்டிருக்கிறார்கள்? இந்த நாட்டிலே இருக்கின்ற பல்வேறு இனத்தவர்களும் தமது இனவுணர்க்சி குன்றாமல மனவெழுச்சியோடு செயல்புரிகிறார்கள். ஒன்றுபட்ட உள்ளத்தோடு உண்மையில் உழைக்கிறார்கள்; உயர் நிலையில் இருக்கிறார்கள். இதை இவர்கள் உணர்ந்தும் உணராதவர்களாய் இருக்கக் காரணம் தான் என்ன?"

"உணராமல் இல்லை இனவுணர்ச்சி இல்லாதவர்களும் இல்லை. உணர்ச்சி இருக்கிறவர்களும் இருக்கிறார்கள். வழிவழியாக இனநலம் கருதி உழைத்து வருகின்ற உத்தமர்களும் இருக்கிறார்கள். ஆனல் அவர் வழியொழுகாத அறிவிலிகள் அனேகர் இருப்பதனுல் இந்த சமூகம் எந்த வகையிலும் உயர்நிலையடைய இயலாமல் இருக்கிறது"

இப்படித் தான் பேசிக்கொண்டோம் நானும், எங்களூர் முதியவர் ஒருவரும். பிறகு சிலநாள் சென்றபின் பல கிராமங்களுக்கு யான் செல்ல நேர்ந்தது. பலவிடங்களில் நம்மவர் கிராம அதிகாரி (கணக்கர், மணியக்காரர்)களாக இருக்கக்கண்டேன். படித்தவர் ஒருவருமே இல்லையென்றிருந்த எனக்கு இது வியப்பாகத்தான் இருந்தது. ஆனல் அவர்களும் யான் எண்ணியவாறு இனவுணர்ச்சி யில்லாமல் தான் இருக்கிறார்கள்.

பின்னர் சின்னள் சென்றபின் சென்னைக்கு வந்தேன். படித்தவர், பதவியிலிருப்பவர், பணக்காரர்கள் பலரைக் கண்டேன். படித்தவர்களும், பணக்காரர்களுமாக இந்த சமூகத்தில் இவ்வளவு பேர் இருக்கிறார்களா! என்று எண்ணி வியந்தேன். இவர்களில் ஒருவர் இருவர் கூடவா இனவுணர்ச்சியில்லாமல் இருப்பர்? ஒரு சமூகத்தில் ஓர் அறிஞன் பிறந்தால் அந்த சமூகமே பெருமை பெறும். ஒரு பணக்காரன் இருந்தால் அந்த சமூகத்தையே தழைக்கச் செய்வான், என்றெல்லாம் சொல்லுகிறார்களே! பிற சமூகத்தாரிடை இவற்றைப் பிரத்தியட்சமாகவும் காண்கிறோம். இவர்களில் அத்தகைய இயல்புடையார் ஓரிருவர் இல்லாமல் இருக்க முடியாது, ஆயினும் பார்ப்போம் என்ற முடிவுக்கு வந்தேன்.

ஒருநாள்தெருவழியேவரும்போது ஒரு சுவரொட்டியைக் கண்டேன், திகைத்து நின்றேன். கருத்தையும் மனத்தையும் ஒருங்கே கவர்ந்தது அந்த அறிக்கை. 'கவினுறு கலைக்களஞ்சியம்' என்று நாடு நவின்று ஏத்தும் 'மேடைத்தமிழ்' அரங்கேற்று விழா அறிக்கை தான் அது. சென்னை தமிழ்ச் சங்க ஆதரவில். திரு. தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் F.R.S.A. (லண்டன்) அவர்களால்இயற்றப்பட்டமேடைத்தமிழ் அரங்கேற்று விழா மெமோரியல் மண்டபத்தில் நடைபெறும். மாபெரும்புலவர்களோடு எழிசை மன்னர். எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களும் கலந்து கொள்வார்கள்.' என்றசுவரொட்டி அறிக்கைஎனக்கு வியப்பையும், திகைப்பையும் அளித்ததில் வியப்பொன்றும் இல்லை.

சென்னைத் தமிழ்ச்சங்க செயலாளர், பன்மொழிப் புலவர் திரு. தே. போ. மீனுட்சி சுந்தரம் பிள்ளை M. O. L., L. T. அவர்களால் 'மேடைத்தமிழ் அரங்கேற்று விழா' அழைப்பிதழ் ஒவ்வொரு பள்ளிக்கும் அனுப்பப்பட்டது. விழாவிற்குச்சென்றேன். மண்டபத்தினுள் ஈநுழைய இடமில்லை. மண்டபத் தூண்களின் மேற்புறங்களிலெலாம் மக்கள் திரள் திரளாகத் தொங்கிக் கொண்டிருந்தார்கள். நமது எழிசை மன்னரின் இசைத் தமிழோடு மேடைத்தமிழும் குழைந்து நின்றது. மாபெரும் யுலவர்களெல்லாம் மனமார–என் தமது திரிகரணமும் ஒருகரணமாக ஒன்றி உளமார வியந்து புகழ்ந்தார்கள்.

"எதிர்காலம் பேச்சாளரை விளைவித்து உண்மை யறிவின்பத் தமிழகத்தை அமைக்கும் புதுதுலகச்சிற்பி என ஆசிரியரைப் பாராட்டி இந்நூலை அரங்கேற்றுவித்தோம்"

"மேடையைச் சீர் செய்யும் பல திறத் தொண்டுகளுள் விழுமியதொன்று நல்லிலக்கியத் தொண்டு. அத்தொண்டில் நம் தமிழ்நாட்டில் ஒருவர் ஈடுபட்டார். அவர் யார்? அவர் விஸ்வகர்ம மணிவிளக்கு கலைக்கூடம் - சிற்பச்செல்வம் - திரு.

தெய்வசிகாமணி ஆச்சாரியார் என்பவர்"

"சிற்பநூல் வல்ல தெய்வசிகாமணியார் இந்நூல் முகமாகத் தமிழ் மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளார்............கால நிலை நோக்கி இந்நூலைத் தமிழகத்துக்கு அளித்த திரு. தெய்வசிகாமணியார் புகழொளியாண்டும் நிலவுக."

"மேடைத் தமிழ் நூலாசிரியர் ஒரு மேதைத் தமிழ் நூலாசிரியர். மேடைத்தமிழ் நம்மேன்மைத்தமிழ் அன்னையின் ஆடைத்தமிழாக மிளிர்கிறது.

"தெய்வசிகாமணியாகிய திருமால்தமிழர்களாகிய,தேவர்களாகிய தேவர்களுக்கு 'மேடைத் தமிழ்' என்னும் அருளாரமுதத்தைத் திரட்டியெடுத்து வழங்கியுள்ளார்."

"சிற்றுளியின் நாதத்திலே சிந்தனையைச் செலுத்தி சிற்பத்தைச் செதுக்கிய சமூகத் தலைவர், தான் பிறந்த நாட்டு மொழியைப் பண்படுத்த செதுக்கிய சித்திரம் தான மேடைத்தமிழ்".

"இந்நூலை இயற்றிய ஸ்ரீ தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் விஸ்வகர்ம குல சிரேஷ்டர் ....சிற்பத்தொழில் வல்லுனரான ஸ்ரீ ஆச்சாரியார் தமிழ் மொழியினிடத்துத் தமக்குள்ள ஆர்வத்தால் மேடைப்பேச்சு முறையை ஒரு நிர்மல வடிவாகவே நிர்மாணித்திருக்கிறார்."

"தன் நிகரில்லாத் தனிப்பெரும் நூலொன்றைநம்தமிழ்நாட்டிற்கீந்த தகைஞருக்கு தமிழ்மக்கள் கடமைப்பட்டவராவோம்."

"நிகறற்று விளங்கும் பெருநூலொன்றை இரவு பகலாக எழுதி. நமக்கு அளித்துள்ள, ஸ்ரீ தி. மு. தெய்வசிகர்மணி ஆச்சாரியாருக்கு இன்றைய தமிழ் மக்களும், வருங்கால இளைஞர்களும் கடமைப்பட்டவர் ஆவார்கள்."

என, எடுத்துக்காட்டாக இரண்டொருவர் புகழுரைதான் ஈண்டு எடுத்து எழுதினேன். அறிஞர் ஒருவரால் அந்த சமூகத்திற்கே புகழ்! பெரும் புகழ்! கிணற்றுத் தவளையாக இருந்த எனக்கு இவையனைத்தும் வியப்பாகத்தான் இருந்தது. திகைத்துத் திணறிவிட்டேன். படித்தவர் ஒருவருமே இல்லையென்றிருந்த யான், படிந்தவர்களெல்லாம் நேரிலேயே வியந்து புகழ்ந்து பாராட்டப் படுகின்ற, பொன்னுடை போர்த்தப் பெற்ற பேராசிரியர் ஒருவரைப் பெற்றிருக்கிறது நம் சமூகம் எனக் கருதி பெருமித மடைந்தேன், அடைகிறேன்.

வியப்பினும் வியப்பாக இன்னொரு நிகழ்ச்சி! விஸ்வகர்மரே! இளைஞர்கள் உபகாரச் சம்பளம் பெற்று உயரிய கலை பயிலும் பொருட்டு 30.000 ரூபாய் மதிப்புடைய இரண்டு வீடுகளை எழுதி வைத்திருக்கிறார் ஒரு விஸ்வகர்மப் பெரியார் திரு. தி. பார்த்தசாரதி ஆச்சாரியார் என்பவர். அவருக்கு அந்த இரண்டு வீடுகள்தான் திரண்ட சொத்தாக இருந்தன. அதுவும் அறவழியில் குலத்தொழில் புரிந்து ஈட்டிய தொகையால் ஏற்பட்ட வீடுகள். "இனத்தினர்க் கழகு குலத்தினைப் பேணல்" "கொடையெனப்படுவதுகுலத்தினர்க்கீதல்" என்பவற்றிற்கு இலக்கியமாகவன்றோ விளங்குகிறார், திரு. தி. பார்த்தசாரதி ஆச்சாரியார்! திரு. ஆச்சாரியார் அவர்கள் இவ்வறப் பணியை ஆற்றியபோது இனநலன்கருதும் பெரியோர் பலருடன் நமது விஸ்வகுல திலகம். கந்தர்வகான ரத்தினம், ஏழிசை மன்னர். திரு. எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களும் இத்தகைய அறப்பணியை இயற்றுவிடினும், வந்திருந்து சிறப்பித்தது குறிப்பிடத் தக்கதாக இருந்தது. வியப்புறுகிறார்கள் பிறர், இந்த சமூகத்திலும் இனநலன் கருதிப் பொருள் வழங்குகிறவர்கள் இருக்கிறார்களா என்று, வறியவரே இவ்வளவு தொகையை வழங்கியுள்ளாரே! இவரால் இச்சமூக இளைஞர்கள் இலவசக் கல்வியறிவு பெற்று எழுச்சியடைவார், களே என்று திகைக்கிறார்கள். மிகப் பலர்.

பின்னர், சென்னை அரசாங்க மாளிகையிலேயே நமது சமூக மாநாடு கூடியதைக் கண்டேன். 'கூவியழைக்கிறேன் கூடியுழைக்க முன்வருவீர்!' என்ற நமது மாபெருந் தலைவரின் கூக்குரலைக் கேட்டேன். (கூடியுழைக்காத மூடர்களைக் கூவியழைப்பானேன் ? என்று என்னையானே கேட்டுக் கொண்டேன்) படித்தவர்களும் பட்டம் பெற்றுப் பதவியிலிருப்பவர்களும், பணக்காரர்களுமாக பலப்பவர் ஆண்களும் பெண்களும் அணியணியாகக் குழுமினர், அரசாங்க மாளிகையில் குழுமிய தோற்றம், அரசாங்கத்தையே இவர்கள் கைப்பற்றி விடுவார்கள் போலிருந்தது. இனநலம் கருதி உழைக்கின்ற இயக்கத்தில நமது ஏழிசை மன்னர், எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களும் இணைந்து பணியாற்றினார்கள். இவையாவும் எனக்கு வியத்தகு மகிழ்ச்சியாகவே இருந்தது.

ஆனால், மகிழ்ச்சிப் பெருக்கால் மறந்து விடவில்லை. மறக்கவும் முடியாது நமது மரபிற்குள்ள மறுவை. எத்தனை எத்தனை மாநாடுகள் கூடிமகிழ்ந்தாலும் மறக்க முடியாத--மறைக்க முடியாத கறை! மறுக்க முடியாத குறை! அழியாத பழியொன்றுளது நமது சமூகத்திற்கு. எங்கேவுள்ளது ? இளங்கோயாத்த இலக்கியக் கருவூலம், இன் தமிழ்ச் சிலம்பில் உள்ளது. இது உண்மையில் நடந்ததா? நடந்திருக்குமா? கலைஞன் கொலைஞனாக இருக்க முடியுமா? கொலையுள்ளம் இருந்தால் கலையுணர்வு உதிக்குமா? நாடு இதை உண்மை வரலாற்று இலக்கியம் என்கிறதே! உண்மையாகத்தான் இருக்குமா? உண்மையில் நிகழ்ந்த எத்தனையோ கோரப்படு கொலைகள் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் வருகின்ற இக்காலத்தில், உண்மையென்று உறுதிப்படுத்தஇயலாமல் இருக்கிற நிகழ்ச்சியை நினைவுறுத்தி எழுதுகிறார்கள், "ஒரு பொற்கொல்லன் கோவலனைக் கொல்வித்ததற்கா கொள்கைப் பாண்டியன் ஆயிரம் பொற்கொல்லரைப் பத்தினி கண்ணகிக்குப் பலி கொடுத்தான். இதற்கு இலக்கியச் சான்று உள்ளது என்று இக்கால இளைஞர்களுக்கு எழுதுகிற 'சமூக அறிவு நூலாசிரியர்கள், எழுதுகின்ற இவர்கள் இது உண்மை வரலாற்று இலக்கியம் என்றுபதை உறுதிப் படுத்துவார்களா? ஏன் இந்த காலத்திலும் இக்கெடுமதி? இவற்றை நடு நிலையில் இருந்து சிந்திப்பவர் எவருமே இல்லையா ?

சிந்தித்தார் சீரியர் ஒருவர்! சரித்திர சம்மந்தமுடையதா என்பதைக் கருத்தூன்றிப் பயின்றார். ஆய்ந்தார் அனைத்தையும், நடு நிலையில் உணர்ந்தார் உண்மையை. உடைத்தார் சிலம்பை! சிதைந்தது சிலம்பு! தெறித்தன அதன் உள்ளிடு மாணிக்கப் பரல்கள், புலவர்களுடைய தலைகளில்! திகைக்கிறார்கள் என்ன சொல்வதென்று. "சிலப்பதிகாரம் இலக்கியக் கருவூல

ஆனால் உண்மை வரலாற்று இலக்கியம் அல்ல கற்பனைக்கதை; கண்ணகி கோவலர்களைக் கதாநாயகர்களாகக்கொண்டு கவிஞன் தனது மனோபாவத்தில் தோன்றியவாறு இலக்கியச் சுவைமலிய அமைத்து இயற்றப்பட்ட கற்பனைக் கதை. என்பதை நாடறிய அம்பலப்படுத்தினார் ஒரு நக்கீரர்.

யார் அந்த நக்கீரர்? சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியா, வித்வான் V. S. சுப்பிரமணிய ஆச்சாரியார் P. O. L. தான். அவர்கள் இவரால் இயற்றப்பட்ட 'சிலப்பதிகார ஆராய்ச்சி' என்ற சீரிய நூல் நமது இனத்திற்கு ஏற்படுத்தப்பட்ட இழிவை முழுவதும் அழிக்கிறது. பழியை ஒழிக்கிறது. மறைக்க முடியாமல் இருந்த கறையை அகழ்ந்து அகற்றுகிறது. மறுக்க முடியாமல் இருந்த குறையை-மறுவை பலப்பல வினாக்களால் வெட்டி வீழ்த்துகிறது. மீண்டும் நினைவுறுத்துகின்ற மிண்டர்களுடைய மண்டைகளை உடைக்கிறது, ஆராய்ச்சி முறையில்.

சிலப்பதிகாரம் என்றும் அழியாததொரு கன்னித்தமிழ் நூல். எனவே, அதில் கூறப்பெறும் செய்திகள் யாவும் அந்நூலை விட்டு அகலா என்பதை அறிவேன். ஆனால் அது உண்மை வரலாறு அல்ல என்பதை வலியுறுத்துகிறது, திரு. ஆச்சாரியார் அவர்களுடைய ஆராய்ச்சி நூல் என்பதை அறிவுறுத்துகிறேன்.

"இதை ஒப்புக்கொள்கிறார்களா" என்று கேட்கப்படுகிறது. இக்காலத்திலும் "கொலைக்கு" இலக்கியச் சான்று இருக்கிறது என்று எழுதி மகிழ்பவர் எப்படி ஒப்புவர்? வழிவழியாக ஒருவரை யொருவர் பழிமொழிவதையே உறுதியென ஒழுகுபவர் உண்மையை ஒப்புவது எப்படி? யான் கேட்கிறேன், இதை மறுத்தவர்-மறுக்கிறவர் யார்? என்று. இந்நூலின் முன்னுரையை உன்னுங்கள். முன்னாள் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் ஆராய்சித் துறைத் தலைவர் என்ன எழுதுகிறார்? சரித்திர அறிஞர் பலருடைய ஆராய்ச்சி முடிபுகளும் இதனை வலியுறுத்துகின்றனவே. இது உண்மை வரலாறு அல்ல என்பது இவர்களுக்கு ஒப்ப முடிந்த கருத்தன்றோ?

அன்பர்களே! அறிஞர். திரு. ஆச்சாரியார் அவர்களால் எழுதப்பட்டு 8-5-51-ல் 'விடுதலை'யில் வெளிவந்த ஆராய்ச்சியுரை, நமது மரபினரை மருவியிருந்த வடுவையும் விடுவிக்கிறதன்றோ? என்ன மனவுரமுடைய வினாக்கள்! விடையளிப்பவர் யார்? விடையளிப்பவர்களுக்கு அடிமையாகிறேன் என்கிறார்! சிந்தித்துப் பாருங்கள்.

இளைஞர்களே! முதியோர்களே! தாய்மார்களே! விழிப்படையுங்கள்! விமோசனம் தேடுங்கள். உங்களை நீங்களே உயர்ந்தவர் என்று புகன்று கொள்ளாதீர்கள். உங்களுக்குள்ளேயே எண்ணற்ற உயர்வு தாழ்வுகளை உண்டாக்கிக் கொள்ளாதீர்கள். நாடு உங்களை என்னகூறி நகைக்கின்றது; ஏளனம் செய்கிறதென்பதை எண்ணிப் பாருங்கள் உங்கள் மரபிற்கு ஏற்பட்ட மறுவை, உங்கள் இனத்திற்கு ஏற்பட்ட இழுக்கை முழுக்க அகற்றிய அறிஞர், உயர்திரு. வித்வான். V. S. சுப்பிரமணிய ஆச்சாரியார் P. O. L. அவர்களுக்கும், முதுமையிலும் இளமையுள்ளத்தோடு உடல்நலன் கருதாது, குலநலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருவதோடு சமூகமக்களுக்குப் பல நூற் கருத்துக்களை ஆய்ந்து திரட்டி ஒரு நூலாக-குல நூலாக-குல வரலாற்று நூலாக "விஸ்வகர்மப் பிராம்மண வம்ஸப் பிரகாசிகை" என்ற உயரிய நூலையும், குல இளைஞர்கள் பயில 'குலநலச்சுவடியும்' தந்து, நமது மரபிற்கே பெருமை தரும் வகையில் தமிழ் வளம்பெற, தமிழர் கலையறிவு பெற 'மேடைத் தமிழ்' என்ற தனிப்பெரு நூலொன்றைத் தமிழகத்திற்கே தந்த நமது சமூகத்தந்தை - மாபெருந் தலைவர். திரு தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களுக்கும் என்றென்றும் கடைமைப்பட்டிருக்கிறீர்கள்.

இருவரையும் கண்டு நாடு வியக்கிறது. திகைக்கிறது. மேடைத்தமிழ் நூலாசிரியர், திரு. தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களைக் கண்டு வெளிப்படையாக வியக்கிறது, அவருடைய புதியது படைக்கும் கலை யறிவையும் தேவையைப் பூர்த்தி செய்த திறமையையும் அறிந்து. இத்தகைய இலக்கியக் கருவூலத்தை நாம் இயற்றவில்லையே, முற்ற முடிந்த ஒரு நூலாக இவர் இயற்றிவிட்டாரே என்று உள்ளூர திகைக்கிறது. திரு. வித்வான் V. S. சுப்பிரமணிய ஆச்சாரியார் அவர்களைக் கண்டு உள்ளூர வியக்கிறது. அவரது ஆழ்ந்த கல்வியறிவையும், ஆராய்ச்சித் திறமையையும், அஞ்சா நெஞ்சத்தையும் அறிந்து. ஆனால் செந்தமிழ் நூல்களில் சிறந்தது சிலப்பதிகாரம். இது சின்னாபின்னமாகச் சிதைக்கப்பட்டதே, சிலம்பு சிதறுண்டு போயிற்றே! என்று திகைக்கிறது; பகைக்கிறது.

'உண்மை உரைப்பவர் ஊரார் பகைவராவது உலக இயற்கை.' 'உச்சிமீது வானிடிந்து வீழுமென்ற போதிலும் எனக்கு அச்சமென்பதில்லை.' ஆழ்ந்து அகன்ற அறிவு இருக்கிறது. என் அறிவு எனது அற்றம் காக்கும் கருவி என்கிறார் நமது ஆசிரியப் பெருந்தகையார்.

விஸ்வகுல வீரர்களே! வீறுகொண்டு எழுவீர்! என்றும் ஒன்றுபடுவீர்! கலையறிவு பெறுவீர்! மடமையகன்று தலைவர் வழிநடவீர்! உங்களுக்குள்ளேயே ஒருவரை யொருவர் குறைகூறிக்கொள்ளாதீர்கள். 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு என்பதை உணருங்கள். நம்மில் எற்றுமை நீங்கில் நம் அனைவர்க்கும் தாழ்வு என்பதை அறியுங்கள். உங்கள் ஒற்றுமையைக் கண்டு நாடு உள்ளூர வியப்புறும். சீரிய உங்கள் கலைத்திறனையறிந்து நாடு திகைப்புறும்.

வாழ்க பெருந்தலைவர்கள்! வளர்க அருங்கலைஞர்கள்! நீங்குக புறப்பகை! ஓங்குக ஒற்றுமை!

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை

பொன், வெள்ளித் தொழிலாளர் சங்க அங்கத்தினர்

ஸ்ரீ. A. சிதம்பரேஸ்வர ஆச்சாரியார் எழுதுவது:

நமது குலோத்தாரகர் என்னைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க கீழ்க் கண்ட விவரங்களை எழுதுகிறேன். எங்கள் நாட்டிலும் பொன், வெள்ளித் தொழிலாளர்கள் 1949-ம் ஆண்டுவரையில் சிறிது கஷ்ட நிலைமையில் இருந்து வந்தார்கள். பொன் கிடைப்பதும் தொழில்கள் கிடைப்பதும் அரிதாக இருந்து வந்தது.

இந்நிலைமையை உணர்ந்த மக்கள், யாழ்ப்பாணம், தெல்லிப்பிழை

சங்கானை, பருத்தித்துறை, உடுப்பட்டி, சாவகச்சேரி, மட்டகிளப், திரிகோணமலை ஆகிய பல முக்கிய ஊர்களில் விஸ்வகர்ம சங்கங்களை சில வருடங்களுக்குமுன் ஏற்படுத்திக் கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் 4-9-49-ல் ஒரு பெரிய மகா நாட்டை ஒருமித்துக் கூட்டினோம். அது யாழ்ப்பாண விஸ்வகர்ம தலைச் சங்கச் சார்பில் கூட்டப்பெற்றது. சிலோனிலுள்ள எல்லா விஸ்வகர்மர்களும் கூடினார்கள். சிலோன் கைத்தொழில் மந்திரி ஸ்ரீ G. G. பொன்னம்பலம் அவர்களும் வந்திருந்து சமூக மக்களை ஊக்குவித்தார்கள். அந்த மகா நாட்டை பிரம்மஸ்ரீ குலோத்தாராக. T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியாரவர்கள் திறந்து வைத்தார். அவருடைய முன்னுரைப் பிரசங்கத்தில் விஸ்வகர்ம தொழிலாளர் படும் துயரத்தைப் படம் பிடித்துக் காட்டியது போல் பேசியும், இத்தொழிலாளருக்கு சர்க்கார் உதவி அவசியமென்றும் எடுத்துக் கூறினார். அவருடைய சொற்பொழிவு மிக உருக்கமாக இருந்தது. அதை கைத்தொழில் மந்திரியார் 'சபாஷ்' என்று மெச்சி ஆமோதித்தார்.

பின்னர், ஒவ்வொரு சங்கங்கள் மூலமாக பொன் தொழிலாளருக்கு அரசியலார் லாபமில்லாமல், அசல் விலைக்கே தங்கம் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. அத்தீர்மானத்தை இலங்கை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டு 1950-ம் வருடமுதல் பவுன் எடை ஒன்றுக்கு சராசரி ரூ. 52-க்கு விற்று வருவதுடன், அந்த பவுனை நகைகளாகச் செய்து, கூலியை நீக்கி, மார்க்கட் விலையாக ரூ. 90 அல்லது 91-க்கு விற்கும்படி அநுமதித்துள்ளார்கள். ஒவ்வொரு பொன் வேலைக்காரருக்கும், அவர்கள் தொழில் வசதிகளுக்குத் தகுந்தாப்போல், மாதம் ஒன்றுக்கு 12 பவுன்முதல் 600 சவரன் எடை வரையில் பரிசுத்தமான தங்கத்தை அவரவர் சங்கமூலமாக கொடுத்துதவி வருகிறார்கள். இப்படியாகக் கொடுக்கும் தங்கம் துர்விநியோகப்படுத்தாமலிருக்க தணிக்கை செய்யும் உத்தியோகஸ்தர்களையும், கணக்கு முறையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சங்கத்தின் அங்கத்தினர்கள் தங்களுக்கு வேண்டிய தங்கம் எவ்வளவு என்பதை சங்கம் மூலம் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். பர்மிட் வந்தவுடன் தங்கத்தை சர்க்காரிடமிருந்து வாங்கிக்கொள்ள வேண்டும். இலங்கை வாசிகளான எங்களுக்கு மார்வாரிகள், செட்டிமார்கள் தயவு வேண்டியதில்லை. அவர்களுக்கு ஏதேனும் ஒரு நகை செய்ய வேண்டுமானாலும், மற்ற கிராக்கிகளைப் போல், எங்கள் ஷாப்பு அல்லது பட்டறைக் கூடங்களில் ஆர்டர் கொடுத்து வாங்கிப்போக வேண்டும். அல்லது செய்து வைத்திருக்கும் 'ரெடிமேட்' நகைகளை வாங்கிக்கொள்ள வேண்டும். இந்த முறையால் நாங்கள் சுயமரியாதையுடனும், குல மரியாதையுடனும் தொழிலை கௌரமாகவும், நாணயமாகவும்நடத்திவருகிறோம். இக்குல புண்ணியம் எங்கள் முயற்சி ஒருபுறமிருக்க, பிரம்ம்ஸ்ரீ குலோத்தாரக T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார் எங்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு செய்த அரிய பிரசங்கத்தின் விளைவு என்பதை இலங்கை வாசிகள் எக்காலத்திலும் மறக்க முடியாது.

எங்கள் நாடு இப்படி சுபிட்சத்திற்கு வந்திருக்க, இந்திய தமிழ் நாட்டுப் பொன் வேலைக்காரர்களின் நிலைமையைப் பார்த்து நாங்கள் கண்ணீர் விட்டோம். செட்டிமார்கள் கடைகளிலும், மார்வாரி கடைகளிலும் சாயங்காலத்தில் நின்றுகொண்டு கூலி பெறுவதையும்: உதாசீனமாகப் பேசப்படுவதையும் பார்த்து நாங்கள் மிகத் துயரமடைந்தோம். திண்ணைகளில் கடை வைத்து தட்டிகொட்டிக் கொண்டிருப்பதைக்காண சகிக்கமுடியவில்லை. திராசு, படிக்கட்டு, ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கிராக்கிகள் வீட்டுக்குப் போய் வேலை செய்யும் பழக்கம் எங்கள் நாட்டில் கிடையாது.

எங்கள் நாட்டு பொன் தொழிலாளர்கள் இவ்வாறு கவுரமாக பிழைத்து வரும் போது, தமிழ் நாட்டு சகோதரர்களுக்கு ஏன் இவ்வித வசதிகளை நமது குலோத்தாரகர் பெற்றுத்தரவில்லை யென்பது எங்கள் நாட்டாருக்கு மிகுந்த ஆச்சரியமாகவேயிருக்கிறது. இதற்கு ஏதேனும் முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும் என்று எண்ணுகிறேன்.

த்லைமை ஆசிரியரின் குறிப்பு:

இந்நாட்டுப் பொன் வேலைக்காரர்களின் நிலைமையை இலங்கை வாசியர்களைப்போல் ஒரு ஆறு மாதங்களில் உயர்த்திவிடலாம். அது எம்மால் கூடும். இலங்கைத் தங்கம் ஆஸ்திரேலியாவினின்றும் இறக்குமதி யாகும் தங்கம். இந்தியாவிலே தங்கம் விளைவதால் ஒரு பவுன் எடை சுமார் ரூ. 40-க்குக் கிட்டும்படிச் செய்யலாம். இலங்கை வாசிகளான நீங்கள் தலைச் சங்கத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கிறீர்கள். ஏராளமான அங்கத்தினர்கள் சேர்ந்து உங்கள் தொழில் நிலைமையை உயர்த்திக் கொண்டீர்கள். அடிமை வாழ்வைப் போக்கிக் கொண்டீர்கள். ஒரு பவுன் எடையில் நகைசெய்து கூலியில்லாமல் பவுன் ஒன்றுக்கு ரூ. 40 இலாபம் அடைந்து வருகிறீர்கள். உங்களுக்கு தரித்திர வாழ்வு இன்னதென்பதை அறியாமலிருந்து வருகிறீர்கள். உங்களுக்கு தொங்கிடல், பெருக்கடை, தைத்துப் பிடித்தல், தார் போடுதல் ஆகிய இந்நாட்டு வேலைத் தனங்களுக்கு அவசியமில்லை. இந்நாட்டு பொன் வேலைக்காரர்கள் ஊரார் தங்கத்தில் புரண்டாலும், இரத்தினங்களில் இழைந்தாலும், ஏழரை நாட்டான் பிடியிலிருந்து இன்னும் விடுபடவில்லை யென்பது உண்மையே.

நமது மத்திய மகா சங்கத்தை உறுதிப்படுத்தாமலும், எல்லா முக்கிய நகரங்களில் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தப் படாமலும், குறைந்தது 10000 அங்கத்தினர் மத்திய சங்கத்துக்குச் சேராவிடினும், நம்மால் எதுவும் சாதிக்கமுடியாது. பணபலம் மட்டும் இதற்கு அவசியமல்ல. ஜனபலம் மிக அவசியமாகும். நமது மத்திய மகாசங்கம் மேற்கண்டவாறு உறுதிபெற்ற ஒரே வாரத்திற்குப்பின் நாம் இதில் தலையிட்டு வெற்றி காண முயல்வோம். அரசியலிலும், வரும் தேர்தலிலும் நாம் இவ்வேளை உழைத்தல் வேண்டும். விஸ்வக்ஞ சகோதரர்களே! சற்று கண் விழித்துப்பாருங்கள். உங்கள் நிலைமையை இலங்கைச் சகோதரர்களின் நிலைமையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நமது நாட்டில் பொருளாதாரச் சிக்கல்கள் சில உள்ளன. அவைகளைக் குறித்துத்தான் சட்டசபைக்குத் தேர்வு பெற முயற்சிக்கிறோம். வெளியிலும் அங்கும் செய்யவேண்டிய வேலைகள் பல

உள்ளன. நாம் ஊதுகிற சங்கை ஊதியே, உரக்கஊதியே வருகிறோம்; பொழுது விடியும் போது விடியட்டும்! நமது மக்கள் உறக்கம் தெளியட்டும்.

இனி சமூகம் கண் விழிக்குமா?

[அன்னியூர் மா. முருகனார்.]

சமூகம் கண் விழிக்குமா? என்ற வினாவை எழுப்புகின்றேன், சமூகப் பெரியோர்கள் முன்னிலையில். ஆம்! முடியும் என்று பதிலிறுப்பவரும், முடியாது, என்று முற்றுப்புள்ளிவைப்பவரும், சமூகத்தில் பலர் இருப்பார்கள். அஃது அவரவர்கள், மன நிலை, சூழ்நிலைக்கேற்றவை.

நாட்டின் சுற்றுப் புறத்தை நோக்கி, விலங்கினங்கள் வாழ்வதைப் போன்று. சமூகம், மனிதனின் சூழ்நிலை நோக்கி வாழ்ந்து வருகின்றது. எனவே, சமூகம் முன்னேற்றம் அடைய, மனிதனின், மனநிலை, தூய்மை பெற்று ஒப்புரவுடன் வாழ்தல் வேண்டும். அந்த ஒப்புரவுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது, அறிவு. அறிவுத் துறையில் மனித சமூகம் முன்னேற்ற மடைந்த ஞான்றே உலகம் உயரிய வாழ்க்கைப் பாதையை அடைந்ததாகக் கருத முடியும். எனவே, இன்றைய சமூக தொண்டிற்கென தன்னலமற்ற துறையில் தொண்டாற்ற வந்துள்ள அறிஞர்கள், சமூக இளைஞர்கள், முன் சமூகத்தை அரித்து அழித்துக் கொண்டிருக்கும், அறியாமைச் சின்னங்களை நிற்கவைத்து, அவைகளை அகற்றுவதற்கான ஆற்றல் பல அளித்தாலன்றி இன்றைய சமூகம், தன்மான உணர்ச்சியோடு விழிப்படைய முடியாது. சமூகத்தின் உயிர்நாடியான உணர்ச்சி, இன்று அழிந்துள்ளது. அழிந்ததேன்? சமூகத்தில், தன்னல வாதிகள் தழைக்கலாயினர்; அவர்கள் உள்ளத்தில் பதவிப் பேயும், தற்புகழ்ச்சியும் தாண்டவமாடின. தாமே இந்நாட்டின் சிற்பிகள் என்று எண்ணலாயினர். சமூகத்தில் ஒதுக்கப் பட்ட ஏழையர்களைக் கண்டு எள்ளி நகைத்தனர். ஆனால் ஏளனத்திற்குரியோர் உழைப்பிலிருந்துதான். சமூக சுயநல வாதிகள், உழைப்பின்றி உண்டு களித்தனர். இந்நிலை இச்சமூகத்திலிருந்து ஒழிய வேண்டுமானால், சமூகத்தைச் சூழ்ந்துள்ள, உயர்வு, தாழ்வு பணக்காரன், பாமரன், ஆண். பெண். வேற்றுமை, பெண்களின் அறியாமை, வீண் களியாட்டங்கள் ஒழிந்து ஒற்றுமை உலாவ, அன்பு அரசாட்சி செய்ய வேண்டும். அப்பொழுது தான் சுகமும் இன்பமும் என்றும், அறிவொளியில் திகழும்.

சமூகத் தொண்டாற்ற வந்துள்ள விஸ்வகலாநிதி. வீழ்ந்து கிடக்கும் உழைப்பாளி சமூகத்தை சமூக உணர்ச்சியான, ஒற்றுமை, கல்வி கைத்தொழில், அன்பு. ஆன பிற அரசியல், பொருளியல், முதலிய உணர்ச்சிகளோடு உலகியலறிவுத் தந்து. ஊக்கமளிக்கும் கருவூலம். சமூகத்தின், இருகண்களில், ஒரு கண்ணாகிய பெண்ணினமாக வாழப்பிறந்த வாழ்வரசிகள், விலங்கினமாகக் கருதப்பட்டு, குற்றஞ் சாட்டி, உள்வீட்டில் கைது செய்து சமூக சம்பிரதாயமென்னும் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யும் சிறுத்தன்மை ஒழியவேண்டும். சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் வாழ்வு அமைந்திருப்பதால், சமூகத்தைச் சீர்பெற அமைத்து, அதன் வழியாக நாட்டின் நலத்தை, காப்பாற்றியவர்களாவதற்கு. சமூக மூட பழக்க வழக்கங்களை அகற்றி. சமூக பணியாற்ற, அறிஞர். துணை கொண்டு சமூக பணிக்குச் சேவை செய்கின்ற விஸ்வகலாநிதி, கைத்திறனும், கலைத் திறனும் நிறைந்த நம்மவர் சமுகத்தில் இன்று மலிந்துகாணும் ஊழல்களை அகற்றி உணர்ச்சி பல அளிக்குமென நம்புகின்றேன். வளர்க விஸ்வகலாநிதியின். நேசமுள்ள தொண்டு! வளர்க விஸ்வகர்ம சமூகம்!

"கலை வளர்த்த நம் சமூகம்"

(P. K. முனிரத்தின ஆச்சார்யார்)
போரணம்பட்டு.

பண்டைய நாகரீகத்திற்கும், உயரிய செல்வாக்குக்கும், இன்று நம் நாட்டை அன்னியர் புகழ்வதற்கும் காரணமாய் இருந்த நம் சமூகம் இன்று தன் நிலை தவறி இருக்கின்றது. காரணம் பல உண்டு; ஊசி முதல் மன்னன்கை செங்கோல், முடிவரை செய்த நம் சமூகம், ஏர் முனை முதல் மன்னன் ஏறும் சிங்காசனம் வரை செய்த நம் சமூகம், சிறு வீடு முதல் பரம்பொருள் குடிகொண்டிருக்கும் கோயில்கள் வரை கட்டிய நம் சமூகம் இன்று சிதறுண்டு உருக்குலைந்திருக்கிறது.

ஒரு நாட்டின்பாதுகாப்பும், அந்நாட்டின் செல்வச் செழிப்பும், அந்நாட்டு கருமானிடமும், தச்சனிடமும் முற்காலம் இருந்தது. இவர்கள் அந்நாட்டின் உயிர்நாடிபோல் இருந்து வாழ்ந்தனர் தம் உடலையும், உழைப்பையும், உயிரையுமே தியாகம் செய்துவந்தார்கள் என்றால் மிகையல்ல. இதற்குச் சான்று "ஓதுவாரெல்லாம் உழுவார் தலைக்கடையில், உழுவாரெல்லாம் கருமார் உலைக்களத்தில்" என்பதே. ஆனால், இடையே வந்த பிரிட்டிஷ் ஆட்சி மூலமும். அந்நிய நாட்டுக் குடிசைத் தொழில்களான நம் ஐந்தொழில்கள் நசிப்பதற்கு காரணமாயின. இதற்கு சுய ஆட்சியேற்றிருக்கும் அரசாங்கத்தார் தக்க முயற்சி எடுத்து, நாட்டுத் தொழில்கள் உயிர்பெற்று மேன்மேலும் வளர்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக கன்னான், வீட்டுக்கேற்ற சகல சாமான்களையும் அன்று தொட்டு இன்றுவரை செய்துகொடுத்து வருகிறான். இன்று இத்தொழில் ஆலைத் தொழில்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் செய்துகொடுத்துள்ள பாத்திரம் பண்டங்கள் பல தலைமுறைகட்கு உபயோகமாகின்றன. ஜப்பான், ஜெர்மனி பாத்திரங்கள் விரைவில் அழிந்துவிடக் கூடியன. அவர்கள் தொழில் தந்திரத்தைப் பின்பற்றி நமது நாட்டார் போலிப் பாத்திரங்களைச் செய்து கொடுத்திருந்தால் இந்த தாழ்ந்த நிலைமை ஏற்பட்டிராது. இது போழ்து இவர்களுக்கு வேண்டிய பித்தளை, செம்பு தகடுகள் வாங்க அரசியலார்கொடுத்துதவுவதில்லை. போதிய அனுமதிச்சீட்டு (லைசென்ஸ்) கொடுத்தும் ஆதரிக்கவில்லை.

இன்று நம்நாட்டை பிறர் புகழ்ந்து பேசுவதற்கு காரணம் நம் நாட்டு சிற்பக்கலையின் உன்னதமேயாம். பண்பட்ட கலையார்வம் அதிகரித்திருந்த நம் கலைஞர்கள் தங்கள் வாழ்நாளின் குறுகியகாலத்திற்குள் வையம் உள்ளளவும் சிரஞ்சீவியாய் திகழும் சிற்பங்களை சிருஷ்டிசெய்து இதய மகிழ்வு கொண்டார்கள்.

வானத்தையளாவும் கோவில்களையும், கோபுரங்களையும் நிர்மாணித்தார்கள். அவைகளால் எங்கும் தங்கள் சிந்தனையிலெழுந்த ஜீவ சிற்பங்களை சிருஷ்டித் தமைத்தார்கள். அவை இன்றும், என்றும் உயிருள்ளனவாய்த் திகழ்கின்றன. ஆனால் அவைகள் இன்று சுண்ணாம்பு அடிக்கப்பட்டும், எண்ணெய் கசண்டுகளால் உருத்தெரியாமல் மறைந்தும் இருக்கின்றன. அவைகளில் மிகப் பல புகைப்படிந்தும், வெளவாலும், பெருச்சாளியும் வாழும் இடமாகவும் உள்ளன. அறிவை வளர்த்த ஆயிரக்கால் மண்டபங்கள் சோம்பேறிகள் தூங்கும் மடமாக உள்ளன.

இவைகளுக்கெல்லாம் காரணம் அன்று செல்வாக்குள்ள சமூகங்கள் மன்னரை மயக்கினார்கள். பலவித சாகஸங்களினால், அரசவையிலும் இடம் பெற்றனர். குருமார்களுமாயினர். சிருஷ்டிகள் நிர்மாணித்தவைகளினுதவியால் வயிற்றை வளர்த்தனர்.

இவைகளால், பூர்வத்தில் பல போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. சித்தூர், வேலூர், சேலம்போன்ற பல கோர்ட்டுகளில் நம் பண்டிதர்களால்வழக்குகள் தொடுக்கப்பட்டு, வெற்றிபெற்றும், நஷ்ட ஈடும்கட்டி கொடுக்கப்பட்டுமுள்ளார்கள். இவ்வித வீண்போராட்டங்கள், நமது முன்னேற்றத்தை தடைப்படுத்தி நமது குலத்தைப் படுகுழியில் ஆழ்த்தி விட்டன.

இந்நாள் பூசாரி பரம்பரையும், மடாதிபதிகளின் பரம்பரையும் பெருத்து விட்டனர், கோயில் மடச்சொத்துக்களைத்தின்று. ஆனால் சிற்பிகளின் பரம்பரை காலச்சக்கரத்தின் பயங்கர காற்று வீசியபோதிலும் கூட அக்கலையைக் கைவிட்டாரில்லை. ஆனால் வறுமையோ வாட்டுகிறது இவர்களை. ஆட்சியாளர் தக்க பாதுகாப்பு அளிக்கவேண்டும். வெளிநாட்டுக்கு சிற்பப்பிரதிமைகளை, சிலைகளைச் செய்ய அனுப்பாமல் நாட்டில் ஆஸ்தான சிற்பிகளை ஏற்படுத்தி அவர்கள் மூலம் அக்கலையை உயிர்ப்பிக்கவேண்டும். ஆங்காங்கு சிற்பக் கல்லூரிகளை ஏற்படுத்தலும் வேண்டும். அரசியாலாரை எதிர்பார்த்து இனி வீண்காலங் கழிக்கலாகாது. நமது மத்திய மகா சங்கம் இதில் கவனம் செலுத்தி ஆவனபுரியுமென நம்புகிறேன். விஸ்வகர்ம இரத்த வோட்டமுடைய ஒவ்வொருவரும் மத்திய சங்கத்துக்கு திரிகரண சுத்தியாக உதவி புரியவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

அடுத்தபடியாக நாட்டுப் பொற்கொல்லர்கள் கால்கணையாழி முதல், மன்னன் மகுடம்வரை செய்த இவர்கள். மாதத்தில் பெரும்பான்மை நாட்கள் உறங்கிக்கிடக்கின்றனர். வேலையில்லாமல். கணவன் மனைவி, உறவிற்கு அத்தாட்சியாயிருப்பது பொற்கொல்லன் செய்த தாலியாகிய முத்திரையே. இந்த முத்திரையை கழுத்தில் கட்டினால் மனைவி, இல்லையென்றால் வைப்பு என்று பெரியோர்கள் வேறு பெயர்கள் சொல்லுகிறார்கள். அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்களைச் செய்யும் இவர்களின் இன்றைய நிலைக்கு காரணம் இடையே வந்த பொருள் பலமுடைய மார்வாடி, பனியாக் கூட்டமேயாம்.

இவர்கள் ஆங்காங்கு வட்டிகடைகளும், நகைக்கடைகளும் வைத்து கொள்ளை லாபம் பெற்று பொற்கொல்லர்களுக்கு தனியான வேலையில்லாமல் செய்துவருகின்றனர். இவர்களை அவரவர் மாகாணத்திலேயே தடுத்து ஒரு மாகாணத்தவர் மற்றொரு மாகாணத்தாரை சுரண்டாமலும், அடிமைப் படுத்தாமலும் இருக்கச்செய்வது அரசாங்கத்தாரின் முக்கிய பொறுப்பாக வேண்டும். இது நம்மாகாணத்திலே பெரும்பான்மையோரின் கோரிக்கையும் நம் கொள்கையும் கூட. அப்படிச் செய்தால்தான் நம் நாட்டு குடிசைத் தொழில்களும், நம் சமூகமும் முன்னேறும். நம் சமூக மக்களில் அநேகர் தொழில் வல்லவர்களாகவே இருக்கின்றனர்.

ஆனால் நம் சமூகம் முன்னேற அடிப்படையானது கல்விச்செல்வம். கல்வித்துறையில் பெரிதும் சலுகைகாட்டி இன்றுள்ள அரைச் சம்பள முறைக்கு பதிலாக இலவசச் சம்பள (ஸ்காலர்ஷிப்) முறையை ஏற்படுத்தவேண்டும் நம் அரசாங்கம். இச்சலுகையை இந்நாட்டின் உயிர் நாடிபோன்ற நம் சமூகம் பெரிதும் பயன் படுத்திக்கொண்டு அறிவுத்துறையில் முன்னேற வேண்டும்.

அப்படிச் செய்தால் தான் நம் சமூக முன்னேற்றத்திற்கு பயன்படக்கூடிய ஜீவிய ஆலோசகரும், குலநலத் தொண்டருமான பிரம்மஸ்ரீ டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியாரால் தீர்மானித்து வகுக்கப்பட்ட திட்டம் வெற்றிபெறும். நம் சமூகம் முன்னேறுவதற்கு முதல் அறிகுறியாக 16-வது மகாநாடு சென்னையிலே நடந்தது. மகா நாடு வெற்றி பெறவும், நம் சமூகம் தன் மானமுடன் வாழ்வதற்கும் “விஸ்வகலாநிதி பத்திரிகைதோன்றி குல முன்னேற்ற முயற்சிகளில் பெரிதும் முயன்றுவருகின்றது. நமது சங்க முயற்சியும், குலப்பத்திரிகையின் முயற்சியும் ஒன்று சேர்ந்தால் பொன்னால் செய்யப்பட்ட மலர் வாசனையும் பெறும். சமூக மக்களே! விழிப்படையுங்கள். லட்சக்கணக்கில் சங்கத்தின் அங்கத்தினராக நாளையே சேருங்கள். பத்திரிகை சந்தாதாரர்களாகவும் பதிவு செய்து கொள்ளுங்கள், குலத்திற்கு நன்றே செய்ய முயலுங்கள். அதை இன்றே செய்யுங்கள். நாளை—நாளை என்பது நமன் நாளாகும். இந்த தாரக மந்திரத்தை மறவாதீர்கள்.

இலங்கையில் இன்னிசை வேந்தர், பிரம்மஸ்ரீ. M. K. தியாகராஜ பாகவதர் அவர்கள் பாட்டுக் கச்சேரி

சென்ற மாதம் 30வ யாழ்ப்பாணம், செயிண்டு பாட்டிரிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், யாழ்ப்பாணம் பொன் வெள்ளித்தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற விருந்த ஸ்ரீ பாகவதர் அவர்களின இன்னிசைக் கச்சேரி, பாஸ்போர்டுகளும், வீசாக்களும் காலத்தில் கிடைக்காத முக்கிய காரணத்தால் மேமீ 26வ சனிக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டடு, விமரிசையாக நடைபெறும் எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீ பாகவதர் அவர்கள் தமது சகாக்களுடன் 25வ காலை பிளேனில் திருச்சியினின்றும் வந்து சேருவார். ஜீவிய ஆலோகரும், அவரது நண்பர்களும் சென்னையினின்றும் விமானமூலம் 24வ காலையில் புறப்பட்டு, 10மணிக்கு யாழ்ப்பாணம் சேருவார். அன்பர்கள் ஆயிரமாயிரமாக வந்திருந்து கச்சேரியை, அரிய தருணத்தைச் சிறப்பிக்கமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஜீவிய ஆலோசகர்,
தலைமை ஆசிரியர்.

கடிதப் பெட்டி

விஸ்வகலாநிதி—விஸ்வகர்ம பிராம்மண வம்சபிரகாசிகை

ஜி. பிச்சை, III Hons
அண்ணாமலைப்பல்கழகம்

அச்சம் ஒழித்து ஆண்மை எழுப்பி எச்சமயத்தும் இன்புறச் செய்யும் கருணைமிகுந்த கண்ய!

அடிபணியும் வணக்கம். தாங்கள் நடத்திவரும் "விஸ்வகலாநிதி" யைப் படித்துப் படித்து கங்குகரையில்லா களிப்பெய்தினேன். அதில் கணக்கிடக்கும் கட்டுரைகளும், தலையங்கமும், கடிதங்களும் நம் அரும் பெரும் பண்டைய சமூதாயத்தை தட்டி யெழுப்பி புத்துணர்ச்சிக் கொடுக்கும் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. நம் சமூகத்திலும் ஓர் சிறந்த பத்திரிகை இருக்கிறது, அதுவும் தமிழ்நாடு கொடுத்து வைத்த தவப் புதல்வர் தங்களின் தலைமையில் நடப்பது பற்றி இறுமாப்பு அடைந்தேன். பலரிடமும் கலாநிதியைக் காட்டி அகமகிழ்ந்தேன். தனக்கென வாழாது தமது சமூகத்திற்காக வாழும் தங்களின் சலியா உழைப்பையும், விடாமுயற்சியையும் நோக்கி எங்கள் இளநெஞ்சம் வெட்கி தலைகுனிகின்றது. நம் சமூகத்திலே சில புல்லுருவிகளால் இழைக்கப்படும் சிறு துன்பங்களையும் கவனியாது, அணையும் தருவாயில் இருந்த நம் சமூகத்தின் அறிவுச்சுடருக்கு ஆக்கமளித்து ஊக்கமூட்டிய தங்களின் பெருமைகளை அழகுபட கேட்கும் பாக்கியம் பெற்றோம்.

மேலும், தங்களின் புகழொளி "விஸ்வகர்ம பிராம்மண பிரகாசிகை"யில் வீசக்கண்டேன். "உன்னை நீ அறிந்தாயாகில் உனக்கொரு கேடுமில்லை" என்று கைவல்ய நவநீதத்தில் சொல்லிய வாக்கு என் மனத்திரையின் முன் வந்து நின்றது. தன்னைப்பற்றியும், தன் சமூகத்தைப் பற்றியும் தெரியாத ஒருவன் தன் தேசத்தையும், பிறநாட்டையும் பற்றி எவ்வாறு தெரிந்து கொள்ள இயலும்? மனிதர்களாகப் பிறந்தும் மாக்களாகத் தான் கருதப்படுவார்கள். நாம் யார்? நாம் தோன்றிய காலம் எது? நம் மூதாதையோர் யார்? நமது வழிபடும் தெய்வம் எது? பிறசமூகம் இருக்க நம் சமூகத்திற்கு மாத்திரம் 'ஆச்சார்ய' பட்டம் வழங்கப் பட்டதேன்? மறைந்த மாங்கையின் சிறப்பென்ன? அனுமக்கொடியின் அடிப்படை தத்துவம் என்ன? நாம் ஆரிய வகுப்பாரைச் சேர்ந்தவர்களா? என்பன போன்ற சந்தேகங்களுக்கு உங்களுடைய சிற்ப நெஞ்சம் சித்தரித்துக் காட்டியிருப்பது கண்கூடு. கிறிஸ்தவர்களுக்கு பைபில் இருப்பது போலவும், இஸ்லாமியருக்கு குரான் இருப்பது போலவும் விஸ்வகர்மர்களுக்கு இப்பிரகாசிகை இருக்க வேண்டுமென்ற கருத்துக்கொண்டு இந்நூலைத் தந்த தங்களுக்கு என்ன கைமாறுசெய்யவல்லோம்? நல்லோர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை என்ற பழமொழிக் கிணங்க தங்கள் ஒருவரால் செய்யப்படும் சேவை விஸ்வகர்ம சமூகத்திற்கே பயன் அளிக்கிறது என்பது நம் சமூகம் என்றும் மறவாது. விஸ்வகர்ம உலகை உய்விக்க வந்த தாங்கள் நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ஸ்ரீ K. N. சதாசிவம் குன்னூர்

குலவிளக்கே! யான் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பல நாளாக மனதில் வைத்து இன்று தங்களிடம் முறையிடுகிறேன். இதன் விளக்கம் நம் "விஸ்வகலாநிதியில் வெளியிடுவீர்கள்" என்று நம்புகிறேன், அதாவது.

நம் விஸ்வகர்ம மத்திய மகாசங்கமானது இந்த தென் மாகாணத்தை கன்னடம் தெலுங்கு, தமிழ், மலையாளம் என்ற பிரிவு பகுதிகளை கொண்டு அமைந்திருப்பதாக தெரிகிறது. ஆனால், தெலுங்கு நாட்டில் இருக்கும் மலையாளி (மலையாளத்து மலையாளிதட்டார் அல்லது தச்சர் முதலிய) கன்னடத்து மலையாளி அதைபோலவே மற்றஇடங்களிலும் இருக்கும் மலையாளிகளை இந்த சங்கமுகா நிதரம் எப்படி நடத்த வேண்டும்.

தங்கள் கணக்கு பிரகாரம் தென் மாகாணத்தை சேர்ந்த நம் சமூக மக்கள் சுமார் 30 லக்ஷம் என்று குறிக்கிறீர்கள்.

அப்படி குறிப்பிடுவது அவர்களையும் சேர்த்து தானா அல்லது இல்லையா?

ஏனென்றால் நம் மலபார் பகுதிகளில் முக்கியமாக திருவிதாங்கூர்

மன்னிக்க வேண்டும்.

கடந்த 3 வாரங்களாக நாமும் நமது நண்பர்களும், மிகக்கடினமான சலபத்தில் கிடைக்காத பாஸ்போர்ட் வாங்கும், வேலையில் முனைந்திருந்ததால், நமது கலாநிதியில் அவசியம் வெளிவர வேண்டிய சில கட்டுரைகள், கடிதங்கள், சமூகச்செய்திகள் ஆகியவற்றை, இச்சஞ்சிகையில் வெளிப்படுத்த இயலவில்லை, அவைகள் அடுத்த சஞ்சிகையில் நமது இரண்டாவது அரசியல் மகாநாட்டை யொட்டி பல படங்களுடன் வெளிவரும். அன்பர்கள் மன்னிக்க.

தலைமை ஆசிரியர்

இம்முறையும் பன்முறை கேட்டுக்கொள்கிறோம்

இயன்றவரை, எல்லா சாதாரண அங்கத்தினர்கள் ரூ. 3 செலுத்தியவர்கள் மேலும் ரூ. 1. அதிகப்படியாக அனுப்பி தங்களை விசேஷ அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டால், சென்னையில் ஜூன் மாத இறுதியில் நடைபெறவிருக்கும் 2-வது அரசியல் மகாநாட்டில் கலந்து கொள்ளவும், வோட்டுச்செய்யவும் அருகராவார்கள்.

விஸ்வகலாநிதிக்கு, இப்போது இருந்து வரும் ஒவ்வொரு சந்தாதாரரும், தங்கள் நண்பர்களுக்கெல்லாம் நமது கலாநிதியைக் காட்டி, பிரசாரம் செய்து, விரதம் பூண்டு தலையொன்றுக்குக் குறைந்தது இரண்டு சந்தாதாரர்களையேனும் சேர்த்துதவும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. அரசியல் மகாநாடு கூடுவதற்கு முன் குறைந்தது பதினாயிரம் அங்கத்தினர்கள் நமது சங்கத்திற்குப் பதிவுசெய்யப் படவேண்டுமென்பதை மிகக்கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். உண்மைக் குலாபிமானிகள் ஒவ்வொருவரும் ஊக்கம் காட்டுவார்களாக.

ஜீவிய ஆலோசகர்,
தலைமை, ஆசிரியர்

பகுதியில் தமிழ்விஸ்வபிராம்மணர் என்றும் மலையாள கம்மியர்க சிறிது காலத்திற்குமுன் சர்க்கார் ளென்று முன்னிலையில் முடிவு ஆகியிருக்க, மலையாளத்திலிருந்து மற்ற பகுதிகளுக்கு இரண்டுதரப்பட்டவர்களும் குடியேறிருப்பதாலும் சில இடங்களில் நம் சங்க தலைவர்கள் ஆதரித்து (ம. கம்மியர்களை) சங்கத்தில் அவர்களையும் சேர்த்துகொள்ள வேண்டுமென்றும் அதுதான் கால இயல்பு என்றும் வாதாடுகிறார்கள். ஆகையால் பலவிதமான இடைஞ்சல்கள் ஏற்படுகிறது.

ஆகையால் கருணைகடலே இடரொழிக்க பிரார்த்திக்கிறேன். கருணை புரியவும் இப்படிக்கு உங்கள் பாத கமலங்களையே நம்பியிருக்கும் ஊழியன்.

நிகழும் கரவரு சித்திரைமீ 22உ (5-5-51) ஸ்திரவாரம் வேத உபாத்தியாயரும் பொன் தொழில் வல்லுனரும் நங்குல முன்னேற்றத்திற் குழைக்கும் பெரியாருமான பிரம்மஸ்ரீ N. A. வெங்கடாசலாச்சாரியார் அவர்களுக்கு நமது ஸ்ரீ ஆதிபீடாபரமேஸ்வரி காளிகாம்பாள் சன்னதியில் சஷ்டியப்தி பூர்த்தி திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் குல பிரமுகர்களும் ஷராப்பு வியாபாரிகளும் வந்து இவ்விழாவை சிறப்பித்தனர். ஷி திருமணத்தின் ஞாபகார்த்தமாக, நமது குலத்தின் நன்மையை நாடி பணியாற்றிவரும் குலப்பத்திரிகை "விஸ்வகலாநிதி"க்கு ரூபாய் 1-0-0 ஒன்று ஷியாரால் அன்பளிப்பு அளிக்கப்பட்டது. நன்றியோடு பெற்றுக் கொண்டோம். த. ஆர்.

விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை விஸ்வகலாநிதி பற்றிய குலாபிமானிகளின் புகழுரைகள்

பிரம்மஸ்ரீ R. முத்தையா அவர்கள், ஈப்போ, F. M. S. எழுதுவது.

"இப்புத்தகம் 7-3-51-ல் எனக்கிடைத்தது. ஒரு முறை இந்நூலைப் பொதுவாகவும், சில பகுதிகளைக் குறிப்பாகவும் படித்தேன். மட்டிலா மகிழ்ச்சி கொண்டேன். தங்களுடைய ஆயுட்கால ஆராய்ச்சிகளைக் கொண்டுள்ள இப்புத்தகம், அதன் எடையைவிட பன் மடங்கு பொன் விலையுடையதாகும். விலைமதிக்கொணாததெனவும் சந்தேகமின்றிச் சொல்லலாம். இது நமது பிற்கால சந்ததியாருக்கு—என்—இன்றுள்ள சமூக மக்களுக்கு, தங்கள் வரலாற்றை, பார்த்த மாத்திரத்தில் அறிந்து கொள்ள அரியதோர் சாதனமாகும். இந்நூல் பண்டைய சரித்திரவரலாறுகளைத் திரட்டிக்கொடுக்கும் நூலாக இருப்பதால், இதை ஒவ்வொரு தமிழ் அறிஞர்களும், புலவர்களும், ஆழ்ந்து படித்துணர்வதற்கு ஏற்ற நூலாகும்"

இலங்கை, கோக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் பிரம்மஸ்ரீ செ. வேலாயுதபிள்ளை (ஆச்சாரியார்) எழுதுவது:

"குலப்பெரியோய்!

சில திங்களின் முன்னர் நீங்களியற்றிய "விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை"யின் பல பகுதிகளை வாசித்தேன். அதனை அமைதியோடு படித்து உண்மை யறிவதற்குப் பாடசாலை விடுமுறை நாட்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இந்நூல் ஆராய்ச்சி முறையில் அழகாக எழுதப்பட்டிருக்கின்றது. இத்தகைய நூல் அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடக்கும் நம் குலத்தவர்க்கு அத்தியாவஸ்யமானதே.

'விஸ்வகலாநிதி' பத்திரிகையை ஆவலோடு படித்துப் பெருமகிழ்வெய்தினேன். எங்குலத்தவர்க்கு இத்தகையதொரு சீரிய பத்திரிகை இன்றியமையாத ஒரு கருவி. விஸ்வகர்ம குலத்துத் தோன்றிய அறிஞர் தம் கலையுள்ளத்தை இப்பத்திரிகை வாயிலாக வெளியிடவேண்டும், உயரிய முறையில் இயைந்த இப்பத்திரிகை எம்மவர் ஆதரவைப் பெறுவதுடன், தமிழறிஞர் மதிப்பையும் பெறுமென்றே நம்புகின்றேன் தன் பெயருக்கேற்ப இப்பத்திரிகை கலைக் களஞ்சியமாகத் திகழ வேண்டும். வாய்ப்புக் கிடைத்தால், என கருத்துக்கள் சிலவற்றைக் கட்டுரை வாயிலாக எழுதி வெளியிடலாமென எண்ணியுள்ளேன்.

அப்பத்திரிகைக்கு நன்றி பாராட்டி, மணியார்டர் மூலம் ரூ. 4-8-0 அனுப்பி அங்கத்தினராக வர விழைகின்றேன்."

[பேரறிஞர்களின் புகழுரைகளையும் கட்டுரைகளையும், நமது "காலநிதி" எக்காலத்தும் நன்றியோடு மகிழ்ந்தேற்றுக் கொள்ளப்படும். த. ஆர்.]

மதிதரும் நிதிவாழ்க!

மதிகலா, கரூர் எழுதியது

அன்புமிக்க குலநலப் பெரியோர்களே!

உலகத்தூடே பற்பல காட்சிகள் நன்மை தீமையுணராது, தற்கால நிகழ்ச்சிகளிலே இயங்கி வருவதை அவரவர்கள் தங்களிடையே கண்கூடாகக் காணலாம். மனித உற்பவங்களிடையே பகவன் பற்பல இடையறு வன்மை மிக்கக் காட்சிகளை தோற்றுவிப்பதும் மனித சாம்ராஜயத்தினிடையே ஓர் வரப்ரசாதமே. அதிலும் பல உயிரணுக்களாகவும் சில தேகனேமயமாகவும் சில வாயுமயமாகவும் பல நீரணுக்களாகவும் பல பூத உருவுவாய்மை பெற்றவைகளாகவும் இருந்து மனிதனுக்கு, மனிதனுடைய வாழ்நாளிலே பற்பல இடையறு இன்னல்களையும் அகற்றி ஆனந்த வாழ்க்கையேற்று நடாத்த பகுத்தறிவு எனும் பண்பை அளித்திருக்கிறார் ஆண்டவன். ஆயினும் மக்கள் ஆண்டவன் அளித்த அறிவைஉபயோகப்படுத்த பகுத்தறி வேற்பதில்லை, அப்படியெனின் அறிவை பண்படுத்தி உணர்தலே பகுத்தறிவு! இதனையறியாதுணராதுலகினிடையே உழல்வதையே உழன்று உழன்று காண்கின்றான் மனிதன். ஒருவாறுணர்ந்து உண்மைதெளிந்துநடக்க விரும்பினும் அதனை ஓரத்தேயிருக்கின்ற வினைவிதையேற்கவிழையும் மனிதன் பகுத்தறிய விழையும் மனிதனை தடுத்துத் தன் வழியே மாயையை அளித்து விடுகின்றான் என்? மனிதன் மனிதனை மதிக்கப்படல்வேண்டும் என்ற தத்துவார்த்த உண்மைகளைத் தகர்த்தெரியவோ, இத்தன்மை வாய்ந்த முயற்சிகள் !? காணக்கிடையாப் பொக்கிஷமாகிய நம் மாணிக்கமெனும் நயனங்களிடையே நாம் கண்டு களிக்கும் காட்சிகளினூடே பகுததறிவையும் பிரகாசிக்கச் செய்தல் படித்ததன் பயன் என்பதை நாம் ஓரளவாவதுணர்தல் வேண்டும் என்ற பண்பாட்டிலே பலமொழிகள் எனும் வாய்ப்பிலே முன்னோர்கள் நமக்களித்த பொக்கிஷங்கள் பல! இயற்கை விதியின் பயனை வகுத்துத் தரும் பதியையே நாம் மட்டந் தட்டினால் அது எப்படி நிமிர்ந்து எதிர்நோக்க முடியும் என்பதை எல்லா மக்களும் உணர்தல் வேண்டும். தங்கிதடையின்றி வெள்ளோட்

ளம் போன்ற உணர்ச்சிப் பெருக்கெடுத்தோடும் கற்பனை சக்திவாய்ப்பைப் பெற்ற மனித சமுதாயத்திடையே இன்று கல்வி எனும் அம்ஸம் காணப்பெறுததே நம்மவர் செய்த தூரதிர்ஷ்டங்களிலே முதன்மைவாய்ந்தது என்பதில் மிகையாது?! க எனும் அம்ஸத்தில் கருத்தைச் செலுத்தி க, எனும் விளக்கத்திலே கல்வியைக் கண்டு க எனும் பொருளிலே கடைத்தேற நம்மவர்களைக் கூவியழைக்கும் க எனும் அம்ஸம் பொருத்தப்பட்ட நம் "விஸ்வகலாநிதி, வாழ்க. வாழ்க பாரதத் தமிழன்னை விஸ்வேஸ்வரி நாமம்!! வாழ்க பாரத விஸ்வகர்ம சமுதாயம் வாழ்க! பாரத வறிஞர்களெனும் திலகங்களாக வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

நமது கிரிமினல் கேஸ்

நமது கிரிமினல் வழக்கில் எதிரிகளுக்கு மீண்டும் பிடி வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களை எந்த இடத்திலும் கைதுசெய்யப்பட்டு ஜுன் மாதம் 2ந் தேதி குறிப்பட்டிருக்கும் விசாரணைக்கு சென்னைக்குக் கொண்டு வரப் படலாமென நம்பப்படுகிறது. தலை மறைந்து திரிவது ஆண்மகனின் செய்கை அல்லவென்பதை எதிரிகள் அறியாதவர்களல்ல.

கட்டுரையாளர்கட்கு ஒரு நயவுரை.

மிகக் குறுகிய பக்கங்களையுடைய நமது கலாநிதியில் பல பத்திகளைக்கொண்ட நீண்ட கட்டுரைகளை அன்பர்கள் எழுதிக்களிக்கின்றார்கள். இனி அதிகபட்சம் நான்கு பத்திகளுக்கு மேற்பட்ட கட்டுரைகள் பிரசுரிக்கப்படமாட்டா. நீண்ட கட்டுரைகளை தொடர்ச்சியாக இரண்டொரு இதழ்களில் வெளியிடலாமென்றாலோ, கட்டுரைகளின் கருத்துக்கள் சிதறுண்டு அவைகளின் நயமும், அழகும் குன்றிவிடும். கட்டுரைகளின் முக்கியம் வெறும் நீளத்தால் அளக்கப்படுவதல்ல. கருத்துப் பொலிவால் அறியப்படுவனவென்பதை உணர்ந்து இயன்றவரை கட்டுரைகளை அன்பர்கள் இனிச்சுருக்கிஎழுதவேண்டுகிறோம். கட்டுரை எழுதிவரும் அன்பர்கட்கு எமது நன்றி.

த. ஆர்

சமூகச் செய்திகள்

குலாபிமானம்

(5-5-51) சனிக்கிழமை அம்பா சமுத்திரம். S. S. கிருஷ்ணசாமி ஆச்சாரியாரின் தகப்பனார் ஆத்ம சக்தி பெற்ற சு. சுப்பனாச்சாரியாருக்கு வருஷாப்திக சிரார்த்தம் வெகு சிறப்பாக நடைபெற்றது ஷியார் தினம் பகல் 10-மணிக்கு ஷை சமாதியில் சக்தி பூஜை நடைபெற்றது. 2-மணிக்கு இல்லத்தில் சிரார்த்தம் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு ஏராளமான உறவினரும், பிரமுகர்களும் முத்து கிருஷ்ண உபாத்தியாயரும் வந்து சிறப்பித்தனர். சிரார்த்தம் ஞாபகார்த்தமாக சமூக நிலையை உயர்த்த உழைக்கும் குலப்பத்திரிகை விஸ்வ கலா நிதிக்கு அன்பளிப்பாக ரூ. 1-4-0 அளிக்கப்பட்டது. வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம்

த. ஆர்.

விஸ்வகர்ம மகா ஜன சங்கம், அருப்புக்கோட்டை

சமூக டிரஸ்டி பிரம்மஸ்ரீ A. M. செல்லம் ஆச்சாரியார் அவர்கள் தலைமையில் 29-4-51ல் ஞாயிற்றுக் கிழமை இரவு 9-மணிக்கு சங்கக் கட்டிடத்தில் கூடிய பொதுக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்களும், நிர்வாகஸ்தர் தேர்தலும் நடைபெற்றது.

12-4-51 வியாழக்கிழமை உதகை ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி ஆலயத்தின் கலியாண மண்டபத்தில் உதகை ஸ்ரீ விஸ்வ கர்ம ஆபரணத் தொழிலாளர் சங்கத்தார் தமிழ் இசையுலக இளம்பரிதிகளான ஸ்ரீமான்கள் M. M. மாரியப்பா அவர்களுக்கும் திருச்சி லோகநாதன் அவர்களுக்கும் 'நீலகிரி பிரபா' ஆசிரியரின் தலைமையின் கீழ் பேருபசாரம் ஒன்று நடத்தினார்கள் ஷை ஆலயத்தின்கலியாணமண்டபம் முழுவனம் நகர மக்களால் நிரம்பியிருந்தது.

ஷை சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் T. K. கிருஷ்ணன் அவர்கள் ஸ்ரீமான் மாரியப்பா அவர்களுக்கும் ஷை லங்கத்தின் சார்பாக மாலையிட்டு வரவேற்பு பத்திரம் வாசித்தளித்தபின் ஸ்ரீ மாரியப்பா அவர்களும் லோகநாதன் அவர்களும் ஷை சங்கத்தாரின் உபசாரத்திற்குத் தங்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்து பதிலளித்தார்கள்.

ஷை சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ T. K. கிருஷ்ணன் அவர்கள் வந்தனோபசாரம் கூற விழா இனிது முடிந்தது;

சங்க நிர்வாகஸ்தர்கள்

1. கு. கோச்சடை ஆச்சாரி — தலைவர்.
2. அ. கணபதி ஆச்சாரி — உப தலைவர்.
3. மு. ராக்கப்பன் ஆச்சாரி — காரியதரி.
4. பூ. வெள்ளைக் கண்ணு ஆச்சாரி — உப காரியதரிசி.
5. கு. மாடசாமி ஆச்சாரி — பொக்கிஷதார்.

மெம்பர்கள்

6. அ. வெள்ளைச்சாமி ஆச்சாரி
7. க. மீனையா ஆச்சாரி
8. அ. பிச்சை ஆச்சாரி
9. ரா. சுப்பையா ஆச்சாரி
10. த. பாண்டி ஆச்சாரி
11. நா. ராமசாமி ஆச்சாரி

29-4-51-ந் தேதிய கூட்டத்தின் தீர்மானங்கள்

1. நமது விஸ்வகர்ம மகாஜன சங்கத்தை, தென்னிந்திய விஸ்வ கர்ம மத்திய மகா சங்கத்துடன் இணைத்துக்கொள்வது.

2. அடுத்துவரும் பொது தேர்தலுக்கு எங்கள் சங்கத்தின் சார்பாக மத்திய சங்கத்திற்கு பிரதிநிதி அனுப்புவது.

3. இதுவரையில் விஸ்வபிராமண மகாஜன சங்கம் என்று இருப்பதை விஸ்வகர்ம மகாஜன சங்கம் மாற்றி அமைத்து வேலைகள் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

4. மாதச் சந்தா அணா 4 ஆக இருந்ததை தற்சமயம் நம்மவர்களின் தொழிலில் ஏற்பட்ட குறைந்த வருவாய் காரணமாக அணா 2 ஆக வசூல் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

5. நம் குல சிறுவர்களுக்கு கட்டாய கல்விக்கு வேண்டிய உதவிகள், ஏழை பிள்ளைகளுக்கு புஸ்தகம் வகைகள் வாங்கிக் கொடுப்பது, பள்ளிகளில் சேர்ப்பது முதலிய உதவிகள் செய்வது என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இப்படிக்கு
ஜி. கோச்சடை ஆச்சாரியார்
தலைவர்.

ஸ்ரீ. விஸ்வப்பிராம்மண குலர்தர்ம பரிபாலன மகாஜனசபை பெங்களூர்

பாராட்டுக் கூட்ட வைபவம்

பெங்களூர் தண்டுகணநாதர் [illegible]

போடிநாய்க்கனூர்
21—4—51

விஸ்வகர்மத் தொழிலாளர் சங்க 6-வது ஆண்டு நிறைவிழா நடைபெற்றது. தேநீர் விருந்துக்கு பின் நம்குல ஐவர்ணக்கொடியை விஸ்வகர்ம கூட்டுறவு பாத்திர ஸ்டோர் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ மு. சு. பாலசுப்பிரமணியம் ஆச்சாரியார் ஏற்றிவைத்தார். கொடி வணக்கமும், கடவுள் வாழ்த்தும் K. முத்துமாணிக்கம் பாட விழா ஆரம்பமாயிற்று. விழாத்தலைவர் நா. சின்னச்சாமி ஆச்சாரியார் சங்கத்தின் ஒற்றுமையும் அதன் அவசியமும் குறித்துப் பேசினர். பின் விஸ்வகர்ம கூட்டுறவு பாத்திர ஸ்டோர் காரியதரிசி ஸ்ரீ V. போஜு ஆச்சாரியார் இளைஞர் கல்வியும், இளைஞரின் கல்வி முன்னேற்றம் பற்றியும் தெளிவாக சொற் பெருக்காற்றினர். பின் P. காமாக்ஷி S.S.L.C. (சார்ட் கேண்ட்) அவர்கள் தொழில் நுட்பம், சிற்ப நுட்பம் பற்றி பேசினர். ஸ்ரீ S. B. தெய்வநாயகம் அவர்கள் கூட்டுறவும் அதன் அவசியமும் பற்றி பேசினர். உதவிக்காரியதரிசி ஸ்ரீ M. K. தங்கமுத்து ஆச்சாரியார் அவர்களால் ஆண்டறிக்கையும் வரவு சிலவுகணக்கும் வாசித்தபின் சங்கத்தின் எதிர்காலத்திட்டம் பற்றி பேசினர். சங்கக் காரியதரிசி ஸ்ரீ M. S. குலசேகரம் ஆச்சாரியார் சங்கமெம்பர்கள் முற்போக்குத் திட்டங்களுக்கு எப்படி ஒத்துழைக்கவேண்டும் என்பது குறித்துப் பேசினர் சங்கத்தலைவர். வை. பழனிக்குமார் ஆச்சாரியார் நம் சமூகத்தாரை அரசியலிலே ஈடுபட்டு நம்குலத்திற்கு ஆவன செய்ய அங்கத்தினர்களை அறைகூவி அழைத்தார். தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசி வந்தனோபசாரம் கூற விழா இனிது முடிந்தது. கடைசியாக சந்தண தாம்பூலம் வழங்கப்பட்டது.

7வது ஆண்டு நிர்வாகஸ்தர்கள்.

பிரம்மஸ்ரீ வை. பழனிக்குமார ஆச்சாரியார், தலைவர்.
,, ச. குலசேகரம் ஆச்சாரியார், உபதலைவர்.
,, M. S. குலசேகரம் ஆச்சார்யார், காரியதரிசி.
,, M. K. தங்கமுத்து ஆச்சாரியார், உபகாரியதரிசி.
,, கோ. சுப்பையாச்சாரியார், பொக்கிஷதார்.

மற்றும் 8 நிர்வாகஸ்தர்கள் இவ்வாண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உதவிக்காரியதரிசி.

———

விஸ்வகர்ம சங்கம்
(குன்னூர், நீலகிரிஜி)

21-4-51 சனிக்கிழமை காலையில் 11-மணிக்கு குன்னூர் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தில் வைத்து வி. க. மகாசங்கப் புனரமைப்பு திட்டங்கள் நிறைவேறின.

சங்க நிர்வாக மெம்பர்களையும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர். C. ஆறுமுகமாச்சாரியார்
உபதலைவர். N. பெரியதம்பியாச்சாரியார்
காரியதரிசி. A. N. குட்டப்பாச்சாரியார்
உபகாரியதரிசி. K. N. சதாசிவாச்சாரியார்
பொக்கிஷதார். மாரிமுத்தாச்சாரியார்
ஆலோசகர். கணபதியாச்சாரியார்
சில்பி. ரங்கசாமியாச்சாரியார்

கமிட்டி அங்கத்தினர்

(1) M. நாகப்பாச்சாரியார்
(2) K. சாமியாச்சாரியார்
(3) K. வி. சிவருமாச்சாரியார்
(4) V. மாதவராவு
(5) V. சிதம்பராச்சாரியார்
(6) S. அய்யாசாமியாச்சாரியார்
(7) S. பாபநாசாச்சாரியார்

ஆக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில் தலைமைவகித்த ஓட்டல் தொழிலார் சங்க தலைவர் ஸ்ரீ V. A. சந்திரசேகரர் அவர்கள் தற்கால சமூக நிலையை உத்தேசித்து சங்க மூலமாக என்னென்ன நன்மைகளை செய்ய முடியுமென்று விளக்கி பேசினர்.

பின் ஊட்டி வி. க. ஆ. தொ. சங்க காரியதரிசி ஸ்ரீ T. K. கிருஷ்ணனது அவர்கள் சங்கம் ஏற்படுத்துவதின் அத்தியாவசியத்தைப் பற்றி சொற்பொழிவாற்றியபின் காரியதரிசியாரால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

இப்படிக்கு காரியதரிசி
R. N. குட்டப்பன் ஆச்சாரியார்.

———

ஸ்ரீமதி அய்யம்மாளின் மறைவு

———

குலாளமானமிக்க நமது நண்பர் பிரம்ம ஸ்ரீ. N. நல்லையாச்சாரியாரின். அன்னையார் ஸ்ரீமதி அய்யம்மாள் தமது 75ம் வயதில், 23-4-51-ல் ஈரோட்டில் காலமாயினரெனக் கேட்டு மிகவருந்துகிறோம். அவ்வமயம், அவரது இருகுமாரர்களும்இதரஎல்லா உறவினர்களும் அருகிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமதி அம்மையார் தேசாபிமானத்திலும், குலாபிமானத்திலும் சிறந்தவர். மது விலக்கு மறியலில் ஸ்ரீமதி ஈ. வெ. ரா. வின் மனைவியார் நாகம்மையாருடன் கூடித் தொண்டாற்றினர். நமது சமூக மக்கள் 'விஸ்வப்பிராமண, பட்டத்தை இழந்த காலை, இவ்வம்மையார் வைகுண்டமூர்த்து சத்தியக்கிரகம் செய்யத்துணிந்து சென்னை மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டார். சிறை செல்லத் தயாராக இருப்பதாக அரசியலாருக்கு சவால் விடுத்தார்கள், அன்னையும், இளவலும்!

இவரது இறுதிப்பயணம் அலங்கரிக்கப்பட்ட இரதத்தில், திரளான மக்கள் தொடர வெகு விமரிசையாக நடந்தேறியது.

ஸ்ரீமதி அம்மையாரின் இரு குமாரர் சுட்டும், உறவினர்க்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை அறிவித்துக் கொள்கிறோம். அவரது ஆன்மா சாந்தி பெறுவதாக!

இறுதிச்சடங்கில் விஸ்வகலா நிதிக்கு அன்பளிப்பாக அனுப்பிய ரூ 5ம் நன்றியுடன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

T. M. சிவக்கொழுந்து ஆச்சாரியார்.

பொன், வைர ஆபரணத் தொழிற்சாலை,
8, நாராயண முதலி சந்து, ஜி. டி.
சென்னை.

நாணயம்; வேலைப்பாடு மிகுந்த தங்க, வைர ஆபரணங்களைத் தயாரிப்பவர். குறித்த காலத்தில், வேலைகளை உத்திரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

எஸ். மூர்த்தி பிரட் (Fret) அண்டு செல்லோ, சைன்ஸ்.

13, கிளிமன் ரோடு, வேப்பேரி.
சென்னை. 7.

மூர்த்தி அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட அருமைப்பாடான, பலகையில் துளைத்தெடுத்த, பிரகாசமான, விளம்பரப் பலகைகள், விளக்குக் கூண்டுகள் ஆர்டர்களுக்குச் செய்து கொடுக்கப்படும். நானுவித சாயந் தீட்டிய விளம்பரப் பலகைகளும் செய்து தரப்படும். பல கண்காட்சிகளில் பரிசு பெற்றவை. இது போன்ற அழகிய, வேலைப்பாடான, சித்திர தேர்ச்சியான விளம்பர வேலைகளை வேறு இடங்களில் காணமுடியாது.

விவரம் வேண்டுவோர் எழுதிக்கொள்ளலாம், அல்லது நேரில் வந்து பார்க்கலாம்.

'விஸ்வகலா நிதி' பத்திரிகை (சந்தா ரூ. 3.)

"விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை"யும் (விலை. ரூ. 3.)
பதிவு செய்து கொள்ளும் இடங்கள்

சென்னை : T. M. சிவக்கொழுந்து ஆச்சாரியார், நாராயண முதலி சந்து
கோய்ம்புத்தூர் :
ஸ்ரீ. C R. நஞ்சப்பாச்சாரியார்
ஸ்ரீ சாரதாவிலாச நகை கம்பெனி,
பெரிய கடைவீதி கோயமுத்தூர்.

விழுப்புரம் : சித்திரகலா ஸ்ரீ. M. P. வைத்தியநாத ஆச்சாரியார்,
சீத்தாராமய்யர் தெரு, விழுப்புரம்

மாயவரம் : R. C. ராமசுவாமி பத்தர்
பாத்திர வியாபாரம், மாயவரம்.

தஞ்சாவூர் : ஸ்ரீ. K. P. கோபாலசுவாமி பத்தர்,
எல்லையம்மன் கோயில் தெரு, தஞ்சாவூர்.

கும்பகோணம் : ஸ்ரீ. T. S பஞ்சநதீஸ்வர ஆச்சாரியார்
புதுப்பாளையத் தெரு, கும்பகோணம்.

திருச்சிராப்பள்ளி: ஸ்ரீ. A. பெரியசாமி ஆச்சாரியார்
180 பெரிய கம்மாளத்தெரு, திருச்சிராப்பள்ளி

திண்டுக்கல்: ஸ்ரீ. N. S. காமாக்ஷீஸ்வரப் பத்தர்,
பாத்திர வியாபாரம், கடைவீதி, திண்டுக்கல்.

திருநெல்வேலி : ஸ்ரீ. சாஸ்திரி. V. N. கந்தசுவாமி ஆச்சாரியார்,
வைர வியாபாரம், திருநெல்வேலி (ஜங்)

சிவகங்கை : R. C. ஷண்முகநாத ஆச்சாரியார்
(எஸ்டேட் ஆபீஸ்) தெற்கு ரதவீதி, சிவகங்கை.

தேவை

அச்சகம்

எல்லா இயந்திரங்களைக் கொண்ட ஒரு அச்சகம் விலைக்கு தேவை. சென்னையிலுள்ள அச்சகத்தை முதலில் கவனிக்கப்படும். அதிக பட்சம் விலை ரூ. 10,000 இருக்கலாம்.

x x x

சென்னையில் பார்க்டவுன், ஜார்ஜ் டவுன் போன்ற மத்திய இடங்களில் சுமார் 6000 சதுர அடியுடைய ஒரு கட்டிடம் தேவை. காலி நிலமாக இருந்தால், நீண்டகால ஒப்பந்தத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

x x x

நமது மத்திய சங்க ஆபீஸுக்கும், விஸ்வகலாநிதி பத்திரிகாலயத்துக்கும், தமிழ், ஆங்கிலமொழிகளில் தேர்ச்சி பெற்ற சிப்பந்திகளும், சைக்கிள் பியூன்களும், தேவை. வேண்டுவோர் மனுச் செய்து கொள்ளலாம்.

x x x

விவாக மன்றம்

விஸ்வகர்ம குலத்துதித்த நற்குடும்ப பெண்களுக்கு தக்க வரன்களும், பிள்ளைகளுக்கு வதுக்களும் தேர்ந்தெடுத்து உதவப் பெறும். பொட்டோ, படங்கள் ஜாதகங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

மானேஜர் விஸ்வகலாநிதிஆபீஸ்

திக்விஜய் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., பம்பாய்.

டிஸ்டிரிக்ட் ஆர்கனைஸர்கள் வேலைக்கு நல்ல சம்பளத்தில் அலவன்ஸுடன் செலவாக்குள்ள கனவான்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கூடிய சீக்கிரம் வரும் தென்னிந்திய விஸ்தரிப்புதிட்டத்தின் கீழ் நிரந்தர அடிப்படையில் பிராஞ்சு மானேஜர்கள் வேலைக்கு உயர்த்தப்படவும் சந்தர்ப்பங்கள் உண்டு.

விண்ணப்பிக்க :

W. S. வேணுகோபால் நாயுடு, J. P.
30, வாங்ஸ் கார்டன்ரோட், மதருஸ்-2

பொன், வெள்ளி தொழிற்சாலை

வாலாஜாபாத், செங்கற்பட்டு ஜில்லா.

இந்த தொழிற்சாலையில் பொன், வெள்ளி, ரத்தினங்களாலாகிய சகல வேலைகளும், உயர்ந்த வேலைப்பாட்டுடன், குறைந்த கூலியிலும், குறித்த காலத்திலும் செய்துதரப்படும். 'ரெடிமேட்' ஆபரணங்களும் கிடைக்கும். வேண்டுவோர் ஒருமுறை பரீட்சிக்கலாம். பொன், வெள்ளி பரிசுத்தத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்படும். இந்த கம்பெனிக்கு சென்னை கம்பெனிகளாலும், ஆதரிக்கப்பட்டும், ஆர்டர்கள் கொடுக்கப்பட்டும் வருகின்றன.

K. A. தெய்வசிகாமணி ஆச்சாரியார்,
ராஜவீதி, வாலாஜாபாத், பிரொப்ரைட்டர்.

K. G. குருசாமி ஆச்சாரி & சன்ஸ்

ரிஜிஸ்டார்டு நெ. 127307 டிரேட் மார்க்கு K.G.G. சீல்நகைகள்

ஷிராப் கடை, கோபி

K.G.G. சீல் நகைகள் கியாரண்டி உள்ளவை
நாணயமான தங்கம் வெள்ளி நகைகளுக்கும்
பாத்திரங்களுக்கும் நம்பிக்கை உள்ள இடம்

85, கடைவீதி, கோபிசெட்டி பாளையம்

குலநலச் சுவடி மூலமும், உரையும், விளக்கவுரையும்

இந்நூல், போஷகர்களுக்கு இலவசமாகவும், விசேஷ அங்கத்தினர்களுக்கு 2 அணா தபால் தலைகள் பெற்றுக்கொண்டும், சாதாரண அங்கத்தினர்களுக்கு நான்கு இரண்டணா தபால் தலைகள் பெற்றுக்கொண்டும், அங்கத்தினர் அல்லாதவர்களிடமிருந்து 12 அணா பெறுமான தபால் தலைகள் பெற்றுக்கொண்டும் அனுப்பப்பெறும். ஸ்ரீவிஸ்வேஸ்வரர் படமும் இதிலுண்டு.

தி. ஆர்.

குலநன்மக்களே! முக்கிய அறிவிப்பு கண்விழியுங்கள்!!

"கல்லான் ஒருவன் குலநலம் பேசுதல் – நெல்லினுட் பிறந்த பதராகும்மே"

விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை

வெளியாகிவிட்டது! முன்னுடியே பதிவு செய்யப்பட்டவர்களுக்கெல்லாம்
வி. பி. பி.-யில் அனுப்பப்பெறுகின்றன!!
இந்த ஆகம சாஸ்திரத்திற்கு நீங்கள் ஆர்டர் செய்தீர்களா?
நண்பர்களுக்கு வந்திருப்பதை வாங்கிப் படித்துப்பார்த்து, சுவைத்து சுவைத்து இன்புற்றீர்களா?

"இதை வாங்கிப் படிக்காத விஸ்வகர்மர்கள் நாளெல்லாம் பிறவா நாளேயாம்" என ஒரு யாழ்ப்பாணக் குலாபிமானி எழுதுகிறார்; இது ஒரு குடும்பத்தில் இல்லையானல், அது ஸ்ரீ விஸ்வேஸ்வரர் அநுக்ரகம் பெறாத வீடாகும்" என்று எழுதுகிறார் ஒரு வேலூர் குலாபிமானி. பெங்களூர் குலாபிமானிகள் போற்றி அறிக்கை அச்சிட்டு விநியோகித் திருக்கிறார்கள்.

பிரம்மஸ்ரீ குலோத்தராக, டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியாரின் மகத்தான தமது குலக் கடமையை ஸ்ரீ விஸ்வேஸ்வரர் திருவருளால், கலி பிறந்த 5051 ஆண்டுகளுக்குப் பின் பூர்த்தி செய்துவிட்டார். இப்புத்தகம் எங்கும் பூஜைக்குரியதாகி விட்டது, இன்று.

சமூகம் இப்பொழுதாகிலும் முன்னேறுமா? தன்னைத்தான் உணருமா?
பின்னைத்தான் உயருமா?

விலை ரூபாய் மூன்று
(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)
உள்நாட்டுக்கு 0-8-0—வெளிநாடுகளுக்கு 0-12-0
கொஞ்சம் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் வாங்க முந்துங்கள்!

குலநலச்சுவடி &

கொடிவணக்கப்பாட்டு விஸ்வகர்ம ஸ்தோத்திரமும் சேர்க்கப்பட்டுள்ளன.

மூலத்துடன், கருத்துரைகளும் விளக்க உரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.
ஒருவாரத்துக்குமுன் வெளியான புதுநூல்.
பெறும் விபரம்:— உள் அட்டையில் காண்க.

மேடைத் தமிழ்

தமிழ் நாட்டுக்கோர் கலைப் பொக்கிஷமாக ஸ்ரீ. T. M தெய்வசிகாமணி ஆச்சாரியார் தந்துள்ள மேடைத் தமிழ் நூலை, சென்னை யூனிவர்சிட்டி என்னும் சர்வகலா சங்கத்தாரும், அண்ணமலை யூனிவர்சிட்டியாரும், பி. ஏ. வகுப்புக்கும், வித்வான் வகுப்புக்கும் பாட புத்தகமாக ஏற்றுக்கொண்டு விட்டனர்.

ஆகையால், விஸ்வகர்ம மக்களும் இதைப் படித்துப் பயன்பெற்று மேடைகளில் நல்ல பிரசங்கிகளாகப் பிரகாசிக்கவேண்டுமென்ற குலாபிமான நோக்கத்துடன் அதன் விலையை ரூ. 10-ல் இருந்து ரூ. 7க்கு குறைத்துக் கொடுத்து வருகிறோம். தபால் சார்ஜ் வேறு. வேண்டுவோர் உடனே ஆர்டர்செய்க. கொஞ்சம் பிரதிகளே கைவசம் உள்ளன.

T. D. J. ஈசன் கம்பெனி
29-A, திருவேங்கட முதலி தெரு,
பார்க் டவுன் P.O. சென்னை.

Printed by G. Padmanabhan, at the Commercial Syndicate Press, 11, Venkatachala Mudali Street, Purasawalkam, Madras 7. Edited & Published by T. M. Daivasikhamani Achariar, F.R.S.A. (London), 29-A Thiruvengada Mudali Street, Periamet, Madras.